Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, OCTOBER 22, 2021

வெள்ளிக்கிழமை ஒக்டோபர் 22, 2021 | ஒளி: 07 கதிர் 133 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

# 2022 வரையிலும் கொரோனா நீடிக்கும்



கொரோனா தொற்று நிலைமை 2022 ஆம் ஆண்டு வரை நீடித்து காணப்படுமென உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பெரும்பாலான வறிய நாடுகளுக்கு கொரோனா தடுப்பூசிகள் இதுவரை கிடைக்காமையால், இந்த நிலைமை தோன்றியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக 2022 ஆம் ஆண்டு வரை மிக இலகுவாக கொரோனா வைரஸ் தொற்று நீடிக்கக்கூடும் என உலக சுகாதார ஸ்தாபனத்தின் சிரேஷ்ட தலைவர், வைத்தியர் புருஸ் அய்ல்வர்ட் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2









கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஜீவராஜா

## வாழ்க்கை சுமையை தாங்கி சபைக்குள் வந்து எதிர்த்தார்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

அத்தியாவசியப் பொருள்கள் உள்ளிட்ட பல பொருள்களின் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, அத்தியாவசியப் பொருள்களை சுமந்துவாறு கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சண்முகராஜ ஜீவராஜா, கரைச்சி பிரதேச சபை அமர்வுக்கு வருகை தந்தார்.

கரைச்சி பிரதேச சபையின் மாதாந்த அமர்வு, நேற்று (21) நடைபெற்றது.

இதன் போது, பிரதேச சபை உறுப்பினர் சண்முகராஜ ஜீவராஜா, விலை அதிகரித்து மக்களுக்கு சுமையை ஏற்படுத்தியுள்ள சீமெந்து, பால்மா, மா, மஞ்சள், சமையல் எரிவாயு சிலிண்டர்களை சுமந்து கொண்டு, சபை அமர்வில் கலந்துகொண்டு, தனது எதிர்ப்பை வெளியிட்டார்.

அத்துடன், அப்பொருகளை தனது உடல்வைத்து கட்டிக்கொண்ட அவர், அக்கயிற்றை கழுத்திலும் சுற்றிக்கொண்டிருந்தார். மக்களை பெரும் சுமைக்குள் தள்ளியுள்ளதாக, அரசாங்கத்தை சபையில் வைத்து,

தொடர்ச்சி P2

திடீர் சோதனையில்

## அழுகு சாதன பொருள்கள் பறிமுதல்

■ ஏ.ஸ்.கீத்

திருகோணமலை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட என்.சி.வீதி, மத்திய வீதி மற்றும் 3ஆம் குறுக்குத்தெரு வீதிகளில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகளும் பொலிஸாரும் இணைந்து திடீர் சோதனை நடவடிக்கைகளை நேற்று (21) மேற்கொண்டனர்.

தொடர்ச்சி P2



## ஒரே சூழில் 6 செல்வங்கள்



கொரோனா தொற்றுக்காலத்தில் கர்ப்பம் தரிப்பதை தவிர்த்திருக்குமாறு, அறிவுறுத்தப்பட்டிருந்த நிலையில், சகலரையும் சந்தோஷப்படுத்தும் வகையில், ஒரே சூழில் ஆறு குழந்தைகளை தாயொருவர் பிரசவித்துள்ளார்.

நமது நாட்டில் தாயொருவர் ஆறு குழந்தைகளை பெற்றெடுத்திருப்பது இதுவே முதன்முறையாகும். இதற்கு முன்னர் இரண்டொரு தாய்மார்கள் ஐந்து குழந்தைகளை பெற்றெடுத்துள்ளனர்.

தொடர்ச்சி P2

புனர்வாழ்வளிக்கப்பட்டவர்களை

## இரவிரவாக வீடு புகுந்து தூக்குகின்றனர்

**சபையில் ஸ்ரீதரன் தெரிவிப்பு: இராணுவத்திடம் கொடுத்த பிள்ளைகளை பட்டியலிட்டார்**

■ பா.நிரோஸ்

சட்டங்களை மாற்றுவதைப் பற்றி சபையில் பேசிக்குகொண்டிருக்கின்றீர்கள். ஆனால், பலரின் கண் முன்னே, இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் பிள்ளைகளுக்கு நடந்தது என்னவென வினவிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன், அவர்களின் பலர், தான் அதிபராக கடமையாற்றிய பாடசாலைகளில் கல்விப்பயின்ற, ஐந்து வயதுக்கும் 11 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்கள் என்றார்.



17 தமிழ்ப் பெண்கள், குழந்தைகளுடன் சிறையில் இருக்கின்றனர் அவர்களைக்கூட பார்க்கமுடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. பிரபாகரனின் புகைப்படத்தை வைத்திருந்தார் என்றக் குற்றச்சாட்டின் கீழ் திருகோணமலையில் கைது செய்யப்பட்ட இளைஞனை, 3 மாதங்களுக்குப் பின்னரே அவர்களுடைய பெற்றோரால் பார்க்கமுடிந்தது என்றுத் தெரிவித்த அவர், அவ்விளைஞன் விடுதலைப் போராட்டம் பற்றி தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றார்.

தொடர்ச்சி P2

பேஸ்புக் ஊடாக மிரட்டல் விடுத்து

## சிறுவனிடம் கப்பம் கோரியவர் கைது

■ எம்.றொசாந்த்

குடும்பத்தையே கொலை செய்வோம் என பேஸ்புக் ஊடாக 17 வயது சிறுவன் ஒருவருக்கு மிரட்டல் விடுத்து, நகைகள் மற்றும் பெரும் தொகை பணத்தினை கப்பமாக பெற்று வந்த நபர் ஒருவரை, வட்டுக்கோட்டை பொலிஸார் நேற்று முன்தினம் (20), கைதுசெய்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## ‘நினைவாக விரைவில் நினைவுத்தூபி அமைக்கப்படும்’

■ என்ராஜ், எம். றொசாந்த்

இந்திய இராணுவத்தினரால், யாழ். போதனா வைத்தியசாலையில் படுகொலை செய்யப்பட்டோரின் 34ஆவது நினைவு தினம், நேற்று (21) அனுஷ்டிக்கப்பட்டது

யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், படுகொலை செய்யப்பட்டோரின் நினைவாக, உயிரிழந்தோரின் உறவுகளால் பொதுசுடர் ஏற்றி, படுகொலை செய்யப்பட்டோரின் திருவுருவப் படங்களுக்கு

தொடர்ச்சி P2

## மூவரின் உயிர்களைக் குடித்த நீர்வீழ்ச்சியை பார்க்கத் தடை

**காத்தான்குடியைச் சேர்ந்த தந்தையும் இரண்டு குழந்தைகளுமே மரணித்துவிட்டனர்**

■ எம்.எஸ்.எம்.நூர்தீன், சுமணசிறி குணதிலக

வெல்லவாய எல்லேவல நீர் வீழ்ச்சியில் நீராடச் சென்ற காத்தான்குடியைச் சேர்ந்த தந்தை மற்றும் இரண்டு குழந்தைகள் உட்பட மூன்று பேர், நேற்று முன்தினம் (20) மாலை சடமாக மீட்கப்பட்டனர்.

இந்நிலையில், எல்லவெல நீர்வீழ்ச்சியை சுற்றுலாப் பயணிகள் பார்வையிடும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விவகாரம்:

## ஆட்சியாளர்களின் போக்கு தெளிவானது

**30 மாதங்கள் நிறைவில் பேராயர் ரஞ்சித் மெல்கம் ஆண்டகை**

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்த ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள், தற்போதைய ஆட்சியாளர்களால் செயற்படுத்த முடியாதென்பது தெளிவாகி உள்ளதாக பேராயர் ரஞ்சித் மெல்கம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2






## கிழக்கில் 568 பாடசாலைகள் திறந்தன

■ வி.ரி.சகாதேவராஜா, வ.சக்தி, ஹனீபர் ஏ ஹலீம், ஒலுமுதீன் கியாஸ், எம்.எஸ்.எம்.நூர்தீன்

கொரோனா நீண்ட விடுமுறையின் பின்பு கிழக்கு மாகாணத்தில், 200 மாணவர்களுக்கு குறைந்த ஆரம்ப வகுப்புக்களைக் கொண்ட 568 பாடசாலைகள் நேற்று (21) மீளத் திறக்கப்பட்டன. மாணவர்களும் ஆசிரியர்களும் ஆர்வத்தோடு வருகைதந்திருந்தனர்.

கல்வி அதிகாரிகள் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து கண்காணிப்பில் ஈடுபட்டதுடன், வரவு அறிக்கைகளுடன் கண்காணித்து பட்டியலையும் அறிக்கைசெய்தனர்.

தொடர்ச்சி P2



பாடசாளைகள் மீள ஆரம்பம்:

## வடக்கில் பாடசாலைகள் பலவற்றுக்குப் பூட்டு

■ எஸ்.றொசரியன் லெம்பேட், க. அகரன்

நீண்ட நாள்களின் பின்னர், நாட்டில் நேற்று (21) முதல் பாடசாலைகள் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 200 மாணவர்களுக்கு குறைவாக காணப்படுகின்ற பாடசாலைகள் நேற்று முதல், கல்வி நடவடிக்கைகளுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன் அடிப்படையில் மன்னார் மாவட்டத்திலும் 200 மாணவர்களுக்கு குறைவாக உள்ள பாடசாலைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2




## பூட்டை உடைத்து பாடசாலை திறப்பு

கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக மூடப்பட்ட பாடசாலைகளில், 200 மாணவர்களுக்கும் குறைவான பாடசாலைகள் நேற்று (21) திறக்கப்பட்டன.

இந்நிலையில், வெலிமடை ரத்கரவிட்ட மாளிகாதென்ன ஆரம்ப பாடசாலையின் அதிபர், பாடசாலைக்கு சமூகமளிக்கவில்லை. இதனையடுத்து, பாடசாலையின் பிரதான வாயிலில் போடப்பட்டிருந்த பூட்டை உடைத்துகொண்டு உள்நுழைந்தார்.

தொடர்ச்சி P2

# வாழ்க்கை சுமையை தாங்கி சபைக்குள் வந்து எதிர்த்தார்

கடுமையாக அவர் விமர்சித்தார்.

இதன்போது, பிரதேச சபை உறுப்பினர் சண்முகராஜ ஜீவராஜாவின் போராட்டம் நியாயமானது என்று, பிரதேச சபை தவிசாளர் சபையில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒரே சூலில் 6 செல்வங்கள்

கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் வைத்தே அந்தத் தாய், ஆறு குழந்தைகளை நேற்று (21) அதிகாலை பெற்றெடுத்துள்ளார். மகப்பேறு மருத்துவர் மற்றும் மகளிர் மருத்துவ நிபுணர் பேராசிரியர் திரான் டயஸ் தலைமையில் அத்தாய்க்கு அறுவை சிகிச்சை முன்னெடுக்கப்பட்டது. நேற்று (21) நள்ளிரவு 12 பிறகு சில நிமிடங்களில் குழந்தைகள் பிறந்தன.

அதில், மூன்று ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் அடங்குவர். ஆறு குழந்தைகளும், 31 வயதான தாயும் நலமாக இருக்கின்றனர் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. குழந்தைகளின் பெற்றோர்கள் முல்லேரியா- ஐ.டி.எச் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மூவரின் உயிர்களைக் குடித்த நீர்வீழ்ச்சியை பார்க்கத் தடை

சம்பவத்தில், புதிய காத்தான்குடி, பதுறியா வீதியைச் சேர்ந்த இளம் வர்த்தகரான எம்.சி.நியாஸ் (40) அவரது மகன் எம்.என். சஹீட் (14), மகள் எம்.என். சைமா(11) ஆகிய மூவருமே உயிரிழந்தவர்கள் ஆவர்.

கடந்த வெள்ளிக்கிழமையன்று, கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு மகளின் சிகிச்சைக்காக குடும்ப சகிதம் வான் ஒன்றில் சாரதி அடங்கலாக 9 பேர் சென்றுள்ளனர்.

கொழும்பு சென்ற இவர்கள், மொனராகலை வழியாக காத்தான்குடிக்கு வந்து கொண்டிருந்த போது, வெல்லவாயவிலுள்ள எல்லேவல விழ்ச்சிக்குச் சென்றுள்ளனர்.

அங்கு தந்தை மற்றும் இரண்டு பிள்ளைகளும் நீராடியுள்ளனர். இதில் மகள் நீரில் மூழ்குவதை அவதானித்த தந்தையும் சகோதரனும் மீட்க முற்பட்ட போது அவர்களும் நீரில் மூழ்கியுள்ளனர்.

மனைவியும் மற்றைய இரு பிள்ளைகளும் கூடச் சென்ற உறவினர்களும் வெளியில் நின்றுள்ளனர்.

இந்த நிலையில், நீரில் மூழ்கிய தந்தை மற்றும் இரண்டு பிள்ளைகள் அடங்கலாக மூவரையும் அங்கு ஒன்றுதிரண்ட பொது மக்கள், சடலங்களாக மீட்டு, வெல்லவாய வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

இதனையடுத்து அங்கு சென்ற வெல்லாவய பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இந்தச் சம்பவம் காத்தான்குடியில் பெரும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

# கிழக்கில் 568 பாடசாலைகள் திறந்தன

மாணவர், அதிபர், ஆசிரியர் மற்றும் கல்வி சாரா ஊழியர்களின் வரவு என்பன முக்கியமாகக் கவனிக்கப்பட்டது.

அதேவேளை, பொலிஸாரும் சகல பாடசாலைகளுக்கும் சென்று காலை முதலே கண்காணிப்பில் ஈடுபட்டதுடன், வரவு அறிக்கைகளையும் பெற்றுக்கொண்டனர்.

கிழக்கிலுள்ள 13 வலயங்களிலும் பாடசாலைகள் திறக்கப்பட்டன என்று கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் 36 பாடசாலைகள் திறக்கப்பட்டதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரன் தெரிவித்தார்.

அத்துடன், திருகோணமலை மாவட்டத்தில் 168 பாடசாலைகளும் கிண்ணியா வலயக் கல்வி அலுவலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் 31 பாடசாலைகளும் திறக்கப்பட்டிருந்தன.

# வடக்கில் பாடசாலைகள் பலவற்றுக்குப் பூட்டு

மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களில் உள்ள 90 பாடசாலைகள் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மாணவர் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் குழப்ப நிலை காணப்படுவதால், நேற்று (21) பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் வருகை மிகவும் குறைவாக காணப்படுகின்றது.

பாடசாலைகளில் மாணவர்களுக்கான சுகாதார நடைமுறைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் காட்சிப்படுத்தப்பட்டு உள்ளதுடன், சுகாதார நடைமுறைகள் பின்பற்றி மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று வருகின்றனர்.

மேலும், ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு பாடசாலை தொடர்பாகவும் குறித்த பாடசாலைக்கு சமூகமளிக்கும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்பான விவரங்கள் புலனாய்வுத் துறையினர் நேரடியாக சென்று சேகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மேற்கொண்டுள்ள பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக, வவுனியாவில் பல பாடசாலைகள் பூட்டப்பட்டுள்ளதுடன், மாணவர்கள் திரும்பி சென்ற நிலையும் காணப்பட்டது.

வவுனியாவில், 85 பாடசாலைகள், இன்று திறக்கப்படும் என வலயக் கல்வி அலுவலகங்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று காலை, பாடசாலைகள் பலவற்றின் முன் வாயிற்கதவு மூடப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. இதன் காரணமாக, பாடசாலைக்கு வருகை தந்த மாணவர்கள் வீடுகளுக்கு திரும்பி சென்றிருந்தனர்.

இதேவேளை, சில பாடசாலைகள் நேற்றுத் திறக்கப்பட்டு கற்றல்

# இரவிரவாக வீடு புகுந்து தூக்குகின்றனர்

பாராளுமன்றத்தின் நேற்றைய (21) விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்த அவர், கொரோனா முடக்கத்தில், கடந்த மூன்று மாதங்களில் மட்டுமே யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் 39 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை, இரவோடு இரவாக வீடுகளுக்குள் புகுந்து தூக்கிச்சென்றுள்ளனர். பலரும் புனர்வாழ்வளி க்கப்பட்டவர்கள் என்றார்.

இறுதி யுத்தக் காலத்தில் இராணுவத்திடம் சரணடைந்த முன்னாள் போராளிகளின் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என வினவிய அவர், இராணுவத்திடம் சரணடைந்த, ஒப்படைக்கப்பட்டவர்கள் காணாமலாக்கப்பட்டுள்ளனர் என்றார்.

இறுதி யுத்தக் காலத்தில் 2009ஆம் ஆண்டு சிறுவர்கள் பலர் இராணுவத்திடம் சரணடைந்துள்ளனர். முன்னாள் போராளிகளின் பிள்ளைகளல் பலர் தங்களின் பெற்றோர்களுடன் இராணுவத்திடம் சரணடைந்தார்கள். இறுதி யுத்தக் காலப் பகுதியில் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் அதிபாராக நான் கடமையாற்றியிருந்தேன். அப்பாடசாலையில் கல்விப்பயின்ற பலரும் சரணடைந்தனர் என்றார்.

என்னிடம் படித்த பல பிள்ளைகளும் இராணுவத்திடம் சரணடைந்தனர். தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலசந்திரனும் 06ஆம் வகுப்புப் படித்துக்கொண்டிருக்கும்போது இந்த சிறுவர்களுடன் இராணுவத்திடம் சரணடைந்த நிலையில் கொல்லப்பட்டார் என்றார்.

உயிரோடு சரணடைந்த அல்லது இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்களுக்கு என்ன நடந்தது. ஜெனிவா விவாகரம் பேசப்படும்போது இந்த விடயங்களும் பேசப்படும். இராணுவத்திடம் சரணடைந்த சிறுவர்கள் இன்று உயிரோடு இருந்திருந்தால் அவர்கள் அனைவரும் இப்போது 25 வயதை கடந்திருப்பார்கள் என்றார்.

புலிகளின் அரசியற் பொறுப்பாளர், துணை பொறுப்பாளர், விளையாட்டுத்துறை பொறுப்பாளர், வனவல பிரிவுக்குப் பொறுப்பாளர் என பலரும் குடும்பத்துடன் சரணடைந்தார்கள். இதனை நேரில் கண்ட சாட்சிகள் இருக்கின்றன. எனவே இவற்றுக்கு நீதி கிடைக்காதா? எனவும் அவர் இதன்போது கேள்வி எழுப்பினார்.

17 தமிழ் பெண்கள் குழந்தைகளுடன் சிறைச்சாலையில் இருக்கிறார்கள். அவர்களை சென்று பார்க்க முடியாத நிலையே இருக்கிறது. நியாயம் சட்டம் பற்றியெல்லாம் சபையில் பேசப்படுகிறது. ஆனால் கைது செய்யப்பட்டவர்களை பார்ப்பதற்குகூட முடியாத நிலையே இங்கு இருக்கிறது. 3 அல்லது 6 மாதங்களுக்கு மேலாக சிறையில் இருக்கிறார்கள் என்றார்.

இவ்வளவு தூரம் மோசமான நிலையே நாட்டில் காணப்படுகிறது. புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள் வீடுகளில் இருந்து தூக்கிச் செல்லப்படுகிறார்கள். கடந்த மூன்று மாதங்களுக்குள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் 39 பேர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இரவிரவாக கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் எனவும் சிலர் விசாரணைக்காக அழைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு அச்சுறுத்தப்படுகிறார்கள். பாதிக்கப்பட்ட தமிழர்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள் எனவும் கூறினார்.

எவரையும் நினைவுகூற முடியாத நிலையில் தமிழ் மக்கள் இருக்கிறார்கள். ஆனால் சட்டம், ஜனநாயகம் என பேசி சர்வதேசத்திடம் பொய் சொல்லப்படுகிறது. எனவே, இராணுவத்திடம் சரணடைந்த போராளிகளின் பிள்ளைகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, விசாரணைக்காக அழைக்கப்பட்டவர்கள், அச்சுறுத்தப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில்தான், நியாய சட்டம் தொடர்பில் இங்கு உரையாற்றிக்கொண்டிருக்கின்றோம் என்றார்.

# ஆட்சியாளர்களின் போக்கு தெளிவானது

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் 30 மாதங்கள் நிறைவு தினத்தை நினைவுகூர்ந்து கொச்சிகடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நேற்று (21) விசேட ஆராதனைகள் இடம்பெற்றன. இந்த விசேட ஆராதனைகளில் கலந்துகொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் இடம்பெற்று இன்றுடன் (நேற்று 21ஆம் திகதி) 30 மாதங்கள் கடந்தாலும் இதன் பிரதான சூத்திரதாரியை பகிரங்கப்படுத்த முடியாமல் போயுள்ளது. இந்த சம்பவம் பாரியளவில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு சம்பவம் என்றும் இதனை 7- 8 பயங்கரவாதிகளால் செய்ய முடியாதென்றம் அதனை விட நீண்ட திட்டமே இந்தத் தாக்குதலின் பின்னால் இருப்பதாக இந்த வருடம் மார்ச் 8ஆம் திகதி, தன்னை சந்திப்பதற்காக வருகைத் தந்த சட்டமா அதிபர், தன்னிடம் தெரிவித்ததாக பேராயர் தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை சட்டமா அதிபரிடம் கையளித்து 9 மாதங்கள் ஆகியுள்ளன. அதில் பகிரங்கப்படுத்தப்பட்ட பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளில் மிக குறைந்த பரிந்துரைகளே செயற்படுத்தப்பட்டுள்ளன என்றார்.

விசேடமாக பாதுகாப்பு பிரிவுகளின் உயர் அதிகாரிகளின் விசாரணைகளை மூடி மறைக்க பாரிய முயற்சி எடுக்கப்படுவதாக எமக்கு தெரியவந்துள்ளது. ஒரே நாடு ஒரே சட்டம் என வாக்குறுதி வழங்கினாலும் தமக்கு வேண்டப்பட்டவர்களுக்கு ஒரு சட்டமும் ஏனையோருக்கு வேறொரு சட்டமும் செயற்படுத்தப்படுகின்றது.

சட்டத்துக்கு பொறுப்பானவர்களே இந்த சதியின் பங்குதாரர்களாக மாறியுள்ளனர் என தெரிவித்த அவர், இந்த நிலைமையில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு எமக்கு இந்த ஆட்சியின் கீழ் வாய்ப்பு இல்லை என்பது தெளிவாக தெரிகிறது என்றார்.

## 8 தமிழ் கைதிகளுக்கு சிறை மாற்றம்

சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வளிப்பு முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த வருகைதந்த போது அநுராதபுரம் சிறைச்சாலைக்குள் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையின் பிரகாரம் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு, பொலிஸ்மா அதிபருக்கு உயர்நீதிமன்றம் நேற்று (21) கட்டளையிட்டது.

அதேபோல அந்த சம்பவத்துக்கு முகங்கொடுத்த கைதிகள் எண்மரையும் வேறு சிறைக்கு உடனடியாக மாற்றுமாறும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கு, உயர்நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சரான லொஹான் ரத்வத்தே, சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சராக இருந்தபோது, செப்டெம்பர் 12 ஆம் திகதி, மதுபோதையில் தனது சகாக்களுடன் அனுராதபுர சிறைச்சாலைக்குச் சென்று, அங்கிருந்த தமிழ் அரசியல் கைதிகளை அழைத்து, அதிலிருவரை முழந்தாலிடச் செய்து, தனது கைத்துப்பாக்கியை எடுத்து சுட்டுத்தள்ளிவிடுவேன் என மிரட்டினார் என குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். அதன்பின்னர், சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சர் பதவியை மட்டும் செப்டெம்பர் 15ஆம் திகதியன்று திறந்திருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில், தமிழ் அரசியல் கைதிகள் எண்மரும் தங்களுடைய சட்டத்தரணியூடாக அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்திருந்தனர். அம்மனுவை, நேற்று (21) ஆராய்ந்த போதே, உயர்நீதிமன்றம் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

துப்பாக்கியை தலையில் வைத்து சுட்டுவிடுவேன் என அச்சுறுத்தியமை, அடிப்படை உரிமை மீறலாகும். அதற்கு நட்டஈடு கோரியுமே மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனு, உயர்நீதிமன்ற நீதியரசர்களான காமினி அமரசேகர, யசந்த கோதாகொட மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய மூன்று நீதியரசர்கள் குழும் முன்னிலையில், ஆராயப்பட்டது.

அனுராதபுரம் சிறைச்சாலையில் தற்போது இருக்கும் தமிழ் அரசியல் கைகளான பூபாலசிங்கம் சூரியபாலன், மனியராசன் சுலக்ஷன், கணேவன் தராஜன், கந்தப்பு கஜேந்திரன், ராசதுரை சின்னுராசன், மெய்யமுத்து சுனதரன், டி.கந்தரூபன் ஆகியோரே இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

அதில், இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே, அனுராதபுர சிறைச்சாலையின் அதிகார் எம்.எச்.ஆர் அஜித், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயம் எச்.எம்.டி.என் உபுல்தெனிய, நீதியமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சம்பவத்துக்கு முகங்கொடுத்திருந்த கைதிகள், அனுராதபுர சிறைச்சாலையில் இருந்து வட மாகாணத்திலுள்ள சிறைச்சாலையொன்றுக்கு தங்களை மாற்றுவதற்கான இடைக்கால கட்டளையை பிறப்பிக்குமாறும் மனுவில் கோரியிருந்தனர்.

# 2022 வரையிலும் கொரோனா நீடிக்கும்



ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், ஆபிரிக்க மக்கள் தொகையில் 5 சதவீதத்துக்கும் குறைவானவர்களே இதுவரை கொரோனா தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு தடுப்பூசி தேவைப்படும் நாடுகளுக்கு 10 மில்லியனுக்கும் அதிக கொரோனா தடுப்பூசிகளை பிரித்தானியா வழங்கியுள்ளது.

# அழகு சாதன பொருள்கள் பறிமுதல்

இதன்போது, பாவனைக்கு ஒவ்வாத அழகுசாதனப் பொருள்கள், கிறீம் வகைகள், சாயப்பொருள்கள், போலியாக தயாரிக்கப்பட்ட சவக்கார வகைகள் மற்றும் இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு தடைசெய்யப்பட்ட பொருள்கள் போன்றவை பறிமுதல் செய்யப்பட்டதாக, நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட பொருள்களின் சந்தைப் பெறுமதி சுமார் 30 இலட்சத்துக்கும் அதிகமாகுமென தெரிவித்த அதிகாரிகள், அப்பொருள்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்க உள்ளதாகவும் கடை உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேலும், குறிப்பிட்ட தடை விதிக்கப்பட்ட பொருள்களை சமூக வலைதளங்களில் விற்க முற்பட்ட ஒருவரையும், நேற்று (21) காலை நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

# சிறுவனிடம் கப்பம் கோரியவர் கைது

வட்டுக்கோட்டை பகுதியை சேர்ந்த 17 வயதான சிறுவனுடன், பேஸ்புக் போலி கணக்கு ஊடாக அறிமுகமான நபரொருவர், சிறுவனின் பெற்றோர் உள்ளிட்ட குடும்பத்தையே கொலை செய்ய போவதாக, பேஸ்புக் ஊடாக மிரட்டல் விடுத்து கப்பம் கோரியுள்ளார்.

மிரட்டலை அடுத்து, சிறுவன் கப்பம் செலுத்த தயாராகியுள்ளார். அதற்கு அந்நபர் பணத்தை வீட்டுக்கு சற்றுதொலைவில் உள்ள இடமொன்றை குறிப்பிட்டு, அங்கு பணத்தை வைத்து விட்டு செல்லுமாறு பணித்துள்ளார். அதற்கு சிறுவனும் சம்மதித்து, வீட்டில் இருந்த பணத்தை வீட்டாருக்கு தெரியாமல் எடுத்து சென்று அவ்விடத்தில் வைத்துவிட்டு வந்துள்ளார்.

அவ்வாறாக சில நாள்களாக குறித்த நபர் சிறுவனை மிரட்டி பணம் பெற்று வந்த வேளை, பணம் இல்லாத நேரங்களில் வீட்டிலிருந்து நகைகளையும் எடுத்து சென்று சிறுவன் கொடுத்துள்ளார்.

இந்த சம்பவம் சில நாள்களாக நடைபெற்று வந்த நிலையில், வீட்டில் இருந்து நகைகள், பணம் என்பவை காணாமல் போவதை பெற்றோர் கண்டறிந்து, தனது மகனிடம் கேட்டுள்ளனர். அதன் போதே, சம்பவத்தை தனது பெற்றோருக்கு தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பெற்றோரால், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், மிரட்டல் விட்டு கப்பம் பெற்று வந்த நபரை கைது செய்தனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சிறுவனிடம் இருந்து 3 மோதிரங்கள், 3 சங்கிலிகள், 3 காப்பு , ஒரு சோடி தோடு உள்ளிட்ட தங்க நகைகளுடன் , 2 இலட்சத்து 10ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை கப்பமாக பெற்று இருந்தமையை பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த நபர், அந்தச் சிறுவனை தவிர வேறு நபர்களையும் அவ்வாறாக மிரட்டி கப்பம் பெற்று வந்திருக்கின்றாரா? வேறு மோசடி சம்பவங்களிலும் தொடர்புகள் உள்ளனவா எனும் கோணத்தில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ‘நினைவாக விரைவில் நினைவுத்தூபி அமைக்கப்படும்’

மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது

சுகாதார நடைமுறைகளை பேணி மட்டுப்படுத்தப்பட்ட இடம்பெற்ற குறித்த நிகழ்வில், யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், வைத்தியசாலை ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டோரின் நினைவாக, விரைவில் நினைவுத்தூபி ஒன்று அமைக்கப்படும் என, யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.


# பூட்டை உடைத்து பாடசாலை திறப்பு

அதன்பின்னர், மாணவர்களும் பாடசாலைக்கு வந்தனர். அப்பாடசாலைக்கு நேற்றையதினம் இரண்டு ஆசிரியைகளும் ஆசிரியர்கள் இருவரும் வருகைதந்தனர். மதவழிபாடுகளின் பின்னர் கற்பித்தல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

வெலிமடை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு தொலைபேசியின் ஊடாக அறிவுறுத்தியதன் பின்னர், அந்த ஆசிரியர், பூட்டை உடைத்துள்ளார். எனினும், பூட்டை பலவந்தமாக உடைக்கப்பட்டமைக்கு எதிராக அப்பாடசாலையின் அதிபர் டப்ளியு. எம். குணவர்தன, பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

# உரிய நேரத்தில் உரம் கிடைக்கும்

பா.நிரோஸ்



உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு தேவையான உரத்தை அரசாங்கம் வழங்கும் எனத் தெரிவித்த விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கம, உரம் தொடர்பில் பொறுப்பெடுத்துகொள்ளும் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (21) அமர்வில் கலந்துகொண்டு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், இம்மாத இறுதிக்குள் நாட்டுக்கு தேவையான உரம் இறக்குமதி செய்யப்படும். உரத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தடையால் விவசாயிகளின் உற்பத்தி பாதிக்கப்படுமாக இருந்தால் அதற்கு அரசாங்கம் நிவாரணத்தை வழங்கும் எனவும் அவர் இதன்போது கூறினார்.

இரசாயன உரப் பயன்பட்டால் விவசாயிகளுக்கு சிறுநீரகப் பிரச்சினை ஏற்படுகிறது. இதனாலேயே நாம் இரசாயான உர இறக்குமதிக்கு தடை விதித்தோம். இதனால் சில பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதை நாம் ஏற்றுகொள்கிறோம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை அரிசி இறக்குமதி செய்யப்பட்டது தொடர்பில் எதிர்க்கட்சி தலைவரின் கேள்விக்குப் பதிலளித்த அவர், அரிசியை இறக்குமதி செய்வதற்கு ஜனாதிபதிக்கு விருப்பம் இல்லை. எனினும் நாட்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்படப்போவதாக எதிர்க்கட்சி பிரசாரம் செய்தது. அதனாலேயே அரிசி இறக்குமதி செய்யப்பட்டது எனவும் பதிலளித்தார்.

# திருகுமார் நடேஷனால் எனக்கு உயிர் அச்சுறுத்தல்

## சபைக்கு அறிவித்தார் சமிந்த விஜேசிறி

பா.நிரோஸ்



பன்டோரா பத்திரகையில் வெளிப்படுத்தப்பட்ட சொத்துப் பதுக்கல் தொடர்பில் பாராளுமன்றத்தில் உரையாற்றி யிருந்ததால், திருகுமார் நடேஷனால் தனக்கு உயிர் அச்றுத்தல் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, இதுத் தொடர்பில் சபாநாயகர் விசாரணைகளை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (21) அமர்வில் கலந்துகொண்ட சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், பன்டோரா பத்திரிகைகள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருந்த சொத்து பதுக்கள் தொடர்பில் கடந்த பாராளுமன்ற அமர்வில் நான் உரையாற்றியிருந்தேன். இதுத் தொடர்பில் கடந்த 11ஆம் திகதி எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது நான் யார் என கேட்டேன். திருகுமார் நடேஷன் என அவர் கூறினார் என்றார்.

எனக்கு விளங்கவில்லை என்பதால் மீண்டும் யார் என்று கேட்டேன் திருகுமார் நடேஷன் என்றே பதில்வந்தது. " பன்டோரா பத்திரிகையில் வெளிவந்த சொத்து பதுக்கல் தொடர்பில் நீங்கள் பாராளுமன்றத்தில் உரையாற்றியிருந்தீர்கள்." என சிரித்தபடியே கூறி அந்த நபர் தொலைபேசி அழைப்பை துண்டித்திருந்தார் எனவும் கூறினார்.

இந்த தொலைபேசி அழைப்பை நான் எனக்கு விடுக்கப்பட்டுள்ள உயிரச்சுறுத்தலாகப் பார்க்கிறேன். எனவே இதுத் தொடர்பில் நான் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளேன். பாராளுமன்ற உறுப்பினர் என்றவகையில் இதுபோன்ற விடயங்களை நாம் பேச வேண்டும்.

# எனது உரையாடல்களை ஒட்டுக்கேட்டது சி.ஐ.டி

## சபைக்கு அறிவித்த சம்பிக்க, சி.ஐ.டிக்கு எதிராக விசாரணையை கோரினார்



பா.நிரோஸ்

தனது தொலைபேசி , வட்ஸ்அப் உரையாடல்கள் சி.ஐ.டியினரால் சட்டவிரோதமாக ஒட்டுகேட்கப்பட்டதாக குற்றஞ்சாட்டிய பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, இதுத் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்வதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (21) அமர்வில் கலந்துகொண்டு சிறுப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சராக நான் செயற்பட்டபோது விளம்பரங்களுக்காக 75 மில்லியன் ரூபாய் செலவிட்டதாகத் தெரிவித்து அதுத் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக நான் கடந்த மாதம் 24ஆம் திகதி சி.ஐ.டிக்கு அழைக்கப்பட்டிருந்தேன்.

# சபைக்கு வந்தார் ஜனாதிபதி



பா.நிரோஸ்

சபாநாயகர் தலைமையிலான நேற்றைய பாராளுமன்ற அமர்வில், பாராளுமன்றத்துக்கு திடீர் விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கலந்துகொண்டிருந்தார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் - சபைதலைவர் தினேஸ் குணவர்தன, இராஜாங்க அமைச்சர்களான கனக ஹேரத், நாலக்க கொடஹேவா, கஞ்சன விஜேசேகர, அருந்திக்க பெர்ணான்டோ மற்றும் பாராளுமன்ற உறுப்பினரான இசுரு தொடங்கொட ஆகியோர் ஜனாதிபதியை வரவேற்றனர்.

ஆளுங்கட்சி உறுப்பினர்களுடன் சபைக்கு வந்த ஜனாதிபதி ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்களது ஆசனங்களில் இருந்து எழுந்து நின்று வரவேற்றனர்.

சபைக்கு ஜனாதிபதி பிரவேசிக்கும்போது.

# ஜனாதிபதியின் சட்டத்தரணிகளே புதிய அரசமைப்பை உருவாக்குகிறார்கள்

பா.நிரோஸ்



புதிய அரசியலமைப்பை உருவாக்கும்போது சுயாதீன ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தை பாதுகாக்க வேண்டும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சியின் பிரதமக் கொறடாவும் எம்.பியுமான லக்ஷ்மன் கிரியெல்ல, ஜனாதிபதியின் தனிப்பட்ட சட்டத்தரணிகளே புதிய அரசமைப்பை உருவாக்கிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (21) விவாதத்தில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், 19ஆவது திருத்தச் சட்டத்தால் நாட்டுக்குக் கிடைத்த ஒவ்வொன்றையும் தற்போதைய ஜனாதிபதியால் இல்லாது செய்யப்படுவதாக ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவினர் எதிர்க்கட்சியிடம் தெரிவித்ததாகவும் கூறினார்.

குறிப்பாக சுயாதீன ஆணைக்குழு, அரசமைப்புப் பேரவைக்கு இருந்த சுதந்திரம் இல்லாது போயுள்ளது. அதேபோல பொலிஸ், நீதிமன்றம், சட்டமா அதிபர், அரச ஊழியர்கள் சுயாதீனமாக

## நுகர்வோருக்கும், நாட்டு மக்களுக்காகவே

# அவசரக்கால சட்டம்

பா.நிரோஸ்



நுகர்வோருக்காகவும், நாட்டு மக்களுக்காகவும் இலங்கை வரலாற்றில் முதன்முறையாக அவசரக்கால சட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்தியுள்ளதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, பயங்கரவாத செயற்பாடுகளை ஒழிக்கவே கடந்த காலங்களில் அவசரக்காலச் சட்டம் பயன்படுத்தப்பட்டது எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (21) அமர்வில் கலந்துகொண்டு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் கேள்விக்குப் பதிலளித்து உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## பாடசாலைகள் நேற்று ஆரம்பம்

# ஆசிரியர்கள்,மாணவர்கள் வருகையில் பாரிய வீழ்ச்சி

எம்.இஸட்.ஷாஜஹான்





நீர்கொழும்பு கல்வி வலயத்தில் 200 இற்கும் குறைவான மாணவர்கள் உள்ள பாடசாலைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்ட போதும், ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் வருகையில் பாரிய வீழ்ச்சி காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீர்கொழும்பு கல்வி வலயத்தில் 200 இற்கும் குறைவான மாணவர்கள் உள்ள பாடசாலைகள் 30 உள்ளன. கட்டானை கோட்டத்தில் 14 பாடசாலைகளும் நீர்கொழும்பு கோட்டத்தில் ஆறு பாடசாலைகளும், ஜா-எல கல்விக் கோட்டத்தில் 10 பாடசாலைகளும் இவற்றில் அடங்கும்.

கட்டானை கோட்டத்தில் வெலிஹேன ரோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம் 200 மாணவர்களுக்கும் குறைவான மாணவர்கள் உள்ள ஒரு தமிழ் மொழி பாடசாலையாகும். இந்த பாடசாலையில் அதிபர் பாடசாலைக்கு வருகை தரவில்லை. ஒரே ஒரு ஆசிரியரும் இரண்டு மாணவர்களும் வருகை தந்துள்ளனர். ஏனைய ஆசிரியர்கள் கடமைக்கு சமூகமளிக்கவில்லை. கட்டானை பிரதேச சபையினால் அனுப்பப்பட்டுள்ள பயிலுனர் பட்டதாரிகள் மூவரும் ஆசிரிய ஆலோசகர் ஒருவரும் இந்த பாடசாலைக்கு வருகை தந்துள்ளனர். நீர்கொழும்பு கோட்டத்தில் மங்குளிய சாந்த அந்தோனி கனிஷ்ட வித்தியாலயத்துக்கு அதிபரும் ஐந்து ஆசிரியர்களும் 13 மாணவர்களும் வருகை தந்துள்ளனர்.

பொதுவாக நீர்கொழும்பு கல்வி வலய பாடசாலைகளில் மாணவர்களின் வருகை மிகவும் குறைவாக இருந்தது. சில பாடசாலைகளில் அதிபர் வருகை தந்தபோதும் ஆசிரியர்கள் வருகை தரவில்லை. மாணவர்களும் வருகை தரவில்லை. நீர்கொழும்பு கல்விக் கோட்டத்தில் தில்லன்துவ கனிஷ்ட வித்தியாலயம் அவ்வாறான பாடசாலையாகும்.

இன்னும் சில பாடசாலைகளில் மாணவர்கள் முற்று முழுதாக வருகை தரவில்லை. ஜா-எல கல்வி கோட்டத்தில் ஒரே ஒரு பாடசாலையில் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் 30 மாணவர்கள் வருகை தந்திருந்தனர். சகல பாடசாலைகளுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# சிறுநீரகம் தேவை



பாதுக்க, இங்கிரிய வீதி, இலக்கம் 37/28 என்கிற முகவரியைச் சேர்ந்த காமினி செனவிரத்ன என்பவர் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கு ஒ பொசிட்டிவ் சிறுநீரகம் பொறுத்த முடியும் என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சிறுநீரகம் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் ஏ.எல்.எம்.நசார் தெரிவித்துள்ளார். காமினி செனவிரத்னவுக்கு சிறுநீரகங்களை வழங்க எவராவது விரும்பினால் 0711241787, 0718585512 என்கிற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ள வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

**கம்பனியொன்றின் நிலைபர மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) பிரிவின் பிரகாரம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் நிலைபர மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

கம்பனியின் இலக்கம் : PV5789

பதிவு அலுவலக முகவரி : இல: 237/22V, ... கொழும்பு 05.

மாற்றம் நிகழ்ந்த திகதி : 15.10.2021

15.10.2021





ஆளுக்கொரு கதை சொல்லி, விவசாயிகளின்

# வயிற்றில் அடிக்காதீர்கள்

## வாழ்வாதாரமே வேளாண்மையில் தான் தங்கியுள்ளது

■ ஹஸ்பர் ஏ ஹலீம்

“எங்களுக்கு இரசாயன பசளையே வேண்டும்; சேதனப் பசளையால் விவசாய செய்கை அறுவடையை பெற முடியாது. எங்களது வயிற்றில் அடிக்காதீர்கள்” என தம்பலகாமம், சம்மாந்துறை வெளி விவசாய சம்மேளன உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

தம்பலகாமம் பகுதியில் நேற்று முன்தினம் (20) மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே, அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இதில் சம்மாந்துறை வெளி விவசாய சம்மேளனத்தின் உப தலைவர் க.திலகரட்ணம், செயலாளர் க. இராசலிங்கம், உப செயலாளர் க. விஜயரட்ணம், விவசாயி எம்.கிருஷ்ணப் பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தனர்.

அவர்கள் தொடர்ந்தும் தெரிவிக்கையில், “சேதன உரம் காரணமாக, களைநாசினி புற்கள் முளைக்கின்றன. விளைச்சல் குறைவாக உள்ளது. சேதனை பசளைத் தயாரிப்புத் தொடர்பில் எவ்வித அறிவும் எமக்கில்லை. இதனால் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளோம்.

“இந்த அரசாங்கம், ஆளுக்கொரு கதையை சொல்கிறார்கள். பிரதமர் ஒரு கதை, ஜனாதிபதி மற்றும் விவசாய அமைச்சர் என ஆளுக்கொரு கதையை கூறி வருகின்றனர்.

“தம்பலகாமம் பிரதேசம் ஊடாக 2,000 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் நெற் செய்கை பண்ணப்பட்டு வருகிறது. ஆனால், இம்முறை பாரிய வீழ்ச்சி கண்டுள்ளது.

“எங்களது வாழ்வாதாரமே வேளாண்மையில் தான் தங்கியுள்ளது. குடும்பங்களும் இதை நம்பியே வாழ்கின்றன.

“எது எப்படியோ, விவசாயிகளுக்கு இரசாயன உரத்தைப் பெற்றுத்தருமாறு, அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம்” என்றனர்.

திறப்பை ஒப்படைக்குமாறு கூறுவதற்கு

# திலீபன் எம்.பிக்கு அதிகாரமில்லை

■ க. அகரன்

பூறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலையின் அனைத்து திறப்புகளையும், வலயக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு தெரிவிப்பதற்கு, பாராளுமன்ற உறுப்பினர் க. திலீபனுக்கு எந்த அதிகாரமும் இல்லையென, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளை தலைவர் நேசராஜா தெரிவித்தார்.

பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை திறப்புகளை வலயக் கல்வித் திணைக்களத்தில் ஒப்படைக்குமாறு, திலீபன் எம்.பி தெரித்துள்ள நிலையில், அது தொடர்பில், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளை தலைவர் நேசராஜாவிடம் கேட்டபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், அதிபர், ஆசிரியர்கள் தற்போது பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். இது தொழிற்சங்கப் போராட்டம். இந்நிலையில், அதிபர்களிடம் திறப்புகளை ஒப்படைக்குமாறு எவரும் கேட்க முடியாது.

அவ்வாறான ஒரு தேவை இருப்பின், மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஊடாக அறிவுறுத்தல் கிடைக்க வேண்டும். வெறுமனே பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவ்வாறு கட்டளையிட முடியாது. எனவே, பாராளுமன்ற உறுப்பினருக்கு திறப்பை ஒப்படைக்க கூற எந்த அதிகாரமும் இல்லை என, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளை தலைவர் நேசராஜா கூறினார்.

கூட்டத்தில்

# கூறப்பட்ட விடயம் பொய்த்தது

■ க. அகரன்

வவுனியாவில், பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில், வவுனியா அபிவிருத்தி குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. திலீபன் நடத்திய கூட்டத்தில், 80 சதவீதமான பாடசாலைகள் திறக்கும் எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும், அது பொய்த்துப் போயுள்ளது.

அதிபர், ஆசிரியர்கள் போராட்டம் இடம்பெற்று வரும் நிலையில், வவுனியா மாவட்டத்தில், பாடசாலையை ஆரம்பிப்பது தொடர்பில், கடந்த செவ்வாய்க்கிழமை (19), பிரதேச செயலகத்தில், கல்வித் திணைக்கள அதிகாரிகளுடன் சந்திப்பொன்று நடைபெற்றது.

இதன்போது, 21ஆம் திகதியன்று அதிபர், ஆசிரியர்களுடன் பாடசாலைகள் திறக்கப்படும் எனவும் அது 80 சதவீதமாக இருக்கும் எனவும், கல்வித் திணைக்கள அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், நேற்று (21), வவுனியாவில், ஒரு சில பாடசாலைகளை தவிர ஏனைய பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

இதனூடாக, அபிவிருத்தி குழு தலைவர் நடத்திய கூட்டம் பொய்த்துப்போயுள்ளதாக, பலராலும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

தூக்கத்திலிருந்த

# யுவதியின் தங்க சங்கிலி அறுப்பு

■ எச்.எம்.எம். பர்ஸான்



நள்ளிரவில் தூங்கிக் கொண்டிருந்த யுவதி ஒருவரின் தங்கச் சங்கிலியை திருடன் ஒருவன் அறுத்துச் சென்றுள்ள சம்பவமொன்று, வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி, பதுரியா நகரிலுள்ள வீடொன்றிலே நேற்று முன்தினம் (20) இரவு இடம்பெற்றுள்ளது.

வீட்டார் தூங்கிக் கொண்டிருக்கும் போது, கதவை உடைத்து உள்நுழைந்த திருடன், அலுமாரியில் இருந்த 10,000 ரூபாய் பணத்தை திருடிவிட்டு, தூங்கிக் கொண்டிருந்த யுவதியின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியையும் அறுத்துச் சென்றுள்ளான்.

கைக்குண்டுடன்

# மனைவியை பயமுறுத்திய முன்னாள் வீரருக்கு மறியல்

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூவரசன் தீவு பகுதியில் கைக்குண்டு ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் (20) கைதுசெய்யப்பட்ட நபரை, இம்மாதம் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் ஏ.பி.அன்பர் உத்தரவிட்டார்.

கிண்ணியா, பூவரசந்தீவு பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய முன்னாள் இராணுவ வீரர் ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இலங்கை இராணுவத்தின் பொறியியல் பிரிவில் சேவையாற்றிய இவர், முறையான அங்கிகாரத்துடன் இராணுவ சேவையில் இருந்து விலகிவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



கணவனுக்கும் மனைவிக்குமிடையில் குடும்பத் தகராறு ஏற்பட்டுள்ள நிலையில், கணவரான முன்னாள் இராணுவ வீரர், தனது மனைவியை கைக்குண்டை காட்டி பயமுறுத்தியுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சந்தேகநபர் தொடர்பாக கிண்ணியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், சந்தேகநபரை கைக்குண்டுடன் கைது செய்து, திருகோணமலை நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோதே, விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.





# மரம் நடுகை...



வெண்கரம் பசுமைக் கல்வி திட்டத்தின் கீழ், பொன்னாலை, வெண்கரம் படிப்பகத்தில், அண்மையில், மர நடுகைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது, பொன்னாலையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி கலைகலாவல்லி சந்திரராசா, கொன்றை மரக்கன்றை நாட்டி, இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இராணுவ சோதனைச் சாவடியில்

# கஞ்சாவுடன் இளைஞன் கைது

■ செந்தூரன் பிரதீபன்



அச்சுவேலி பிரதான வீதியில் உள்ள இராணுவ சோதனைச் சாவடியில் வைத்து, கஞ்சாவுடன் 28 வயது இளைஞன் ஒருவர், நேற்று (21) கைது செய்யப்பட்டுள்ளார்.

அச்சுவேலி, தோப்பு பகுதியைச் சேர்ந்த இளைஞனே, இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் ஆவார்.

சோதனைச் சாவடியில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர், சந்தேகத்துக்கிடமான முறையில் வந்த குறித்த இளைஞனை விசாரணை மேற்கொண்ட போதே, அவரது உடைமையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், 100 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதையடுத்து, குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டு, அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பொதுப் பயன்பாடுகள்

# ஆணைக்குழுவால் தெளிவூட்டல் பயிற்சி

■ க.விஜயரெத்தினம்

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் பிரதேச செயலாளர்களைத் தெளிவூட்டும் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

அந்தவகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவி பிரதேச செயலாளர்களைத் தெளிவூட்டும் செயலமர்வொன்று, மட்டக்களப்பு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (21) நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில், பிரதேச செயலக ரீதியில் மின் இணைப்புகளை வழங்கும்போது ஏற்படும் பிரச்சினைகள், பிரதேச செயலாளர்களுக்கு உள்ள சட்டபூர்வமான அதிகாரங்கள், எவ்வாறான தீர்வை பெற்றுக்கொடுக்க இயலும் என்பவை தொடர்பாக இதன்போது தெளிவுபடுத்தப்பட்டன.

பாடசாலை மாணவர்களுக்கான

# பைசர் தடுப்பூசி ஏற்றல் மும்முரம்

■ ஹஸ்பர் ஏ ஹலீம், வி.ரி. சகாதேவராஜா, எம் எஸ் எம் நூர்தீன்



கிழக்கு மாகாணத்தில் உள்ள உயர்தர பாடசாலை மாணவர்களுக்கான பைசர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள், நேற்று (21) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று (21) வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் மேலும் குறிபபிட்டுள்ளதாவது, பாடசாலை மாணவர்களாகிய 16, 17, 18, 19 வயதுப் பிரிவைக் கொண்ட மாணவர்கள், அருகாமையில் உள்ள பாடசாலைக்கு சென்று பைசர் தடுப்பூசியை பெறலாம்.

குறித்த பகுதியில் தடுப்பூசி மையம் இல்லையெனில், அருகாமையில் உள்ள மையத்துக்கு சென்று தடுப்பூசியை பெறலாம். மாணவர்கள் இது விடயத்தில் கவனத்திற்கொண்டு, இத்தடுப்பூசியை பெறுவது சிறந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, காத்தான்குடி மத்திய மகா வித்தியாலய தேசிய பாடசாலையில் கல்வி பொதுத் தராதர உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது. காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் யு.எல். நசிர்தீன் மேற்பார்வையில் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

சந்தையில் மக்கள் இல்லாமைக்கு

# போக்குவரத்து நெருக்கடியே காரணம்

■ நடராஜா கிருஸ்ணகுமார்



முல்லைத்தீவு பொதுச்சந்தையில் மக்கள் குறைவாகக் காணப்படுவதற்கு போக்குவரத்து நெருக்கடியே பிரதான பிரச்சினையாக காணப்படுகின்றது என, கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் திருமதி. இமக்குலேற்றா புஸ்பானந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், கடந்த பத்து ஆண்டுகளில், முல்லைத்தீவு நகருக்குள் பஸ்கள் வருகை தருவதில் ஒழுங்கின்மை காணப்படுகின்றது.

பஸ்கள் வருகை தராத நாள்களே கூடுதலாக உள்ளன. 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் முல்லைத்தீவு நகரத்தில் பஸ்கள் தரித்து நின்றன. பொது மக்கள் சந்தை உட்பட பல்வேறு தேவைகளை நிறைவு செய்த பின்னர், பஸ்களில் ஏறி பயணித்தனர்.

ஆனால், நகர அபிவிருத்தி ஏற்படுகின்ற போது, தற்போது மாவட்டச் செயலகத்துக்கு அருகில் புதிய பஸ் நிலையம் அமைந்துள்ளதால், நகர மத்திக்குள் மக்கள் செல்வதற்கு 300க்கும் அதிகமான மீற்றர் தூரம் நடந்து செல்ல வேண்டும் எனவும், அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், இதனால், உள்ளூர் உற்பத்திப் பொருள்களைச் சந்தைக்கு கொண்டு வருவதில், பொதுமக்களுக்கு இடையூறுகள் உள்ளன. மாவட்டத்தில் உள்ளூர் சேவையில் ஈடுபடுகின்ற பஸ்கள், முல்லைத்தீவு நகரத்துக்குள் வருகை தந்தாலே மக்களின் பிரச்சினை தீரும் எனவும் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் திருமதி. இமக்குலேற்றா புஸ்பானந்தன் கூறினார்.

# இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்

■ செந்தூரன் பிரதீபன்

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரண்டு இந்திய மீனவர்களையும் எதிர்வரும் நவம்பர் மாதம் 1ஆம் திகதி வரை, விளக்கமறியலில் வைக்குமாறு, ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் சரோஜினி இளங்கோவன், நேற்று முன்தினம் (20) மாலை உத்தரவிட்டார்.

செவ்வாய்க்கிழமை (19), இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்த பொழுது, இலங்கை கடற்படை படகுடன் மோதுண்டு, இந்திய மீனவர் படகு விபத்துக்கு உள்ளாகி இருந்தது. இதன்போது, ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில், சடலமாக மீட்கப்பட்டு இருந்தார்.

படகு விபத்துக்குள்ளான போது கைது செய்யப்பட்ட இரண்டு இந்திய மீனவர்களும், மேலதிக சட்ட நடவடிக்கைக்காக, காரைநகர் கடற்படையினரால் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பெருந்தோட்டங்களில்

# அடாவடிக்கு விரைவில் முடிவு

## ராமேஸ்வரன் எம்.பி உறுதி



■ எஸ்.கணேசன்

கூட்டு ஒப்பந்தம் இன்மையாலேயே சில பெருந்தோட்டக் கம்பனிகள் அடாவடி செய்கின்றன. இப்பிரச்சினைக்கும் விரைவில் முடிவு கட்டப்படும் என தெரிவித்த நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரின், அதற்கான பேச்சுவார்த்தை இடம்பெறுகிறது என்றார்.

கொட்டகலையில் நேற்று (21) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், உரப்பிரச்சினை தொடர்பில் நாம் ஜனாதிபதி, பிரதமரிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். பெருந்தோட்டத்துறை தொடர்பான விடயங்களுக்கு உரம் கிடைக்கும்.

அதேவேளை, சில தோட்டங்கள் இன்று ஆயிரம் ரூபாவை வழங்குகின்றன. சில தோட்டங்கள் வழங்குவதில்லை. கூட்டு ஒப்பந்தம் இல்லாமை இதற்கு பிரதான காரணமாகும். இது மக்களுக்கும் தெரியும்.

கூட்டு ஒப்பந்தம் இருந்தபோது இ.தொ.காவின் கட்டுப்பாட்டின்கீழ் நடவடிக்கைகள் இடம்பெற்றன. இன்று அது இல்லாததால் சில கம்பனிகள் அடாவடியாக செயற்படுகின்றன. கூட்டு ஒப்பந்தத்தை அடிமை சாசனம் என விமர்சித்த தொழிற்சங்க பிரமுகர்களே, அதனை ஏற்றுக்கொண்டுள்ளனர்" என்றார்.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது, சுழற்சிமுறையில் பதவி மாற்றம் இடம்பெறும் என, எமது உறுப்பினர்களுக்கு மறைந்த தலைவர் அறிவித்திருந்தார். அந்தவகையில் கொட்டகலை பிரதேச சபையின் உப தலைவராக இருந்த சுரேஸுக்கு பதிலாக பாலா நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்காலத்தில் மேலும் சில சபைகளிலும் மாற்றம் வரும்.

ஹட்டன் நகர சபை தலைவரை பதவி விலகுமாறு நாம் பணிக்கவில்லை. அதற்கான தேவையும் எழவில்லை. அவர் அப்பதவியில் நீடிப்பார் என்றார்.

ஹட்டன் நகரில்

# சிகரெட்டுகள் மாயமாகின



■ சுதத். எச்.எம்.ஹேவா

ஹட்டன் நகரில் சிகரெட்டுகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிகரெட்டின் விலை அதிகரிக்கப்படவுள்ளதென வெளிவரும் வதந்திகளையடுத்து, ஹட்டன் நகரின் பெரும்பாலான வர்த்தக நிலையங்களில் சிகரெட்டுகள் மறைக்கப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் போதுமானளவு சிகரெட்டுகள் வர்த்தக நிலையங்களுக்கு கிடைக்கவில்லை என ஹட்டன் நகர வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

# திறந்து வைத்தனர்



கேகாலை பிரதேச சபையால் 3 மில்லியன் ரூபாய் செலவில், தீவெல நகரில் அமைக்கப்பட்ட புதிய வாசிகசாலைக்கான கட்டடம் மற்றும் ஆயுர்வேத சிகிச்சை மத்திய நிலையம் என்பவற்றை இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, சப்ரகமுவ மாகாண ஆளுநர் ஆகியோர் திறந்து வைத்தனர். (எஸ். ஆராச்சி)

அதிபர், ஆசிரியர்களுக்கு எதிராக

# லிந்துலையில் ஆர்ப்பாட்டம்

■ எஸ்.கணேசன், பாலேந்திரன்

அதிபர், ஆசிரியர்கள் நேற்று (21) பாடசாலைக்கு சமூகமளிக்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பெற்றோர்களும் மாணவர்களும் நேற்று (21) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தலவாக்கலை, லிந்துலை - ராணிவத்தை வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களும் அவர்களின் பெற்றோருமே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

200 இற்கும் குறைவான மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள் இன்று திறக்கப்படும் என அரசாங்கம் அறிவித்திருந்தது. இதன்படி பாடசாலையைத் திறப்பதற்கு அதிபர், ஆசிரியர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், மாணவர்களின் கல்வி உரிமையை பாதுகாக்குமாறு வலியுறுத்தியுமே போராடுவதாக பெற்றோர் தெரிவித்தனர்.

"ஒன்றரை வருடங்களுக்கு மேலாக பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இதனால் மாணவர்களில் கல்வி நடவடிக்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகியுள்ளது. எனவே, பாடசாலைகள் திறக்கப்பட வேண்டும். அதிபர், ஆசிரியர்களின் பிரச்சினைகள், போராட்டமின்றி தீர்க்கப்பட வேண்டும்" எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

தோட்டத் தொழிலாளர்களின்

# இருப்பில் சந்தேகம்



■ எம். செல்வராஜா, ராமு தனராஜா

எதிர்வரும் காலங்களில் பெருந்தோட்ட காணிகள் வெளியாட்களால் ஆக்கிரமிக்கப்படுமாயின், அதை நிறுத்தி அந்தந்த தோட்ட இளைஞர் யுவதிகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கத் தான் தயார் என பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்துள்ளார்.

பசறை, கோணகலை, பிலாணிவத்தை பெருந்தோட்ட காணி, வெளியாட்களால் ஆக்கிரமிப்பு செய்யப்படுவது சம்பந்தமாக, மக்களைச் சந்திக்கச் சென்ற போதே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், "பரம்பரை பரம்பரையாக பெருந்தோட்ட காணிகளை பாதுகாத்து வந்த, பெருந்தோட்ட மலையக தொழிலாளர்களே நாட்டினுடைய பொருளாதாரத்தின் வளர்ச்சியின் பெரும் பங்குதாரர்கள்.

இருப்பினும் அவர்களின் இருப்பு தொடர்ந்து கேள்விக்குறியாகவே இருக்கின்றது. ஒரே நாடு ஒரே சட்டம் என்றால் பெருந்தோட்ட மலையக மக்களும் இந்நாட்டினுடைய பிரஜைகள் என்பதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்" என்றார்.

# புப்புரஸ்ஸ நகரின் அபிவிருத்தி பணிகள் ஆரம்பம்



■ நவி

கம்பளை, புப்புரஸ்ஸ நகரை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டம், இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன தலைமையில் வெற்றிகரமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பல தசாப்தங்களாக அபிவிருத்தி செய்யப்படாமல் காணப்பட்ட குறித்த நகரில், குடியேற்றங்கள் அதிகரித்தபோதிலும் நகரம் மேம்படுத்தப்படவில்லை. இந்நிலையில், இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் அநுராதா ஜயரத்வின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதுடன், நகரை மேம்படுத்துவதற்கு நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, புப்புரஸ்ஸ நகரிலுள்ள பஸ் நிலையத்தை புனரமைத்தல் உட்பட நகரின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி, அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்பதற்காக 150 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வில், பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள், பொலிஸார், பிரதேச அரசியல் பிரமுகர்கள் உட்பட பலர் பங்கேற்றிருந்தனர்.

# குடியிருப்பின் மீது மண் திட்டு இடிந்து விழுந்தது

■ சௌ.தீ.பெருமாள்

சாமி மலை, கவரவில தோட்ட பாக்ரோ பிரிவில் நேற்றுமுன்தினம் (20) நள்ளிரவு, குடியிருப்பு ஒன்றின் மீது, மண் திட்டு சரிந்து விழுந்ததால், இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர், உறவினர்கள் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மண்திட்டு குடியிருப்பின் மீது சரிந்து விழும் போது, கர்ப்பிணியொருவரும் இருந்ததாகவும், எனினும் இச்சம்பவத்தில் எவருக்கும் எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான சமைத்த உணவுகளை, மஸ்கெலியா பிரதேச சபை வழங்கி வருவதாக, பிரதேச சபையின் தவிசாளர் கோவிந்தன் செண்பகவள்ளி தெரிவித்தார்.

# "பயில வந்திருக்கோம்; கற்றுத்தர வாருங்கள்"

















கொரோனா பரவலையடுத்து, கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த பாடசாலைகளை, நான்கு கட்டங்களாகத் திறக்க கல்வி அமைச்சு தீர்மானித்திருந்தது. இதில் முதற்கட்டமாக நாடு முழுவதும் 200 மாணவர்களுக்கு குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளை நேற்றிலிருந்து (21) திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. நேற்று (21) திறக்கப்பட்ட மலையக பாடசாலைகள் சிலவற்றை காணலாம்

(மலையக நிருபர்கள்)







# புதிய மாற்றத்துக்கு முன்னர் முன்னாயத்தப்படுத்தலே முக்கியம்

காலவோட்டத்துக்கு ஏற்றவகையில், தங்களைத் தாங்கள் மாற்றிக்கொள்ளாதவர்கள், முன்னோக்கிச் செல்வதில் பாரிய பிரச்சினைகள், சிக்கல்களுக்கு முகங்கொடுத்தே ஆகவேண்டும். ஏனெனில், ஒவ்வொரு துறையும் மாறிக்கொண்டே வருகிறது.

புதியனவற்றைப் புகுத்துவது இலகுவானது. ஆனால், பழையனவற்றிலிருந்து விடுபட்டு, புதியனவற்றுக்குப் பழக்கப்படுவது அல்லது பழக்கப்படுத்துவது, சில துறைகளைப் பொறுத்தவரையில் பெரும் சிக்கலான காரியங்களாகும். இதில், தற்போது இலங்கையில் பெரும் பிரச்சினையாக இருக்கும் உரப்பிரச்சினை பிரதானமானதாய் அமைந்துள்ளது.

சில முடிவுகளைக் காலந்தாழ்த்தி எடுக்கவேண்டும். இன்னும் சில தீர்மானங்களை, எடுத்த எடுப்பிலேயே அமல்படுத்துவதற்கு முயலக்கூடாது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அசேதனப் பசளைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, சேதனப் பசளையைப் பயன்படுத்த வேண்டுமென்ற தீர்மானத்தை எடுத்து, அமல்படுத்தியும் விட்டது. இதனால் பல துறைகளையும் சார்ந்த விவசாயிகள் பெரும் பாடுபட்டுவருகின்றனர்.

விவசாயத்துறையைச் சார்ந்தவர்கள் மட்டுமன்றி, பெருந்தோட்டங்களைச் சார்ந்தவர்களும் தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் சிறுதோட்ட உரிமையாளர்களும் மூக்கின் மேல் கையை வைத்து விழிபிதுங்கி நிற்கின்றனர்.

பெரும்போகத்தை நம்பியிருந்தோரின் தலையில், மண்ணை வாரியிறைத்தல் போலிருக்கிறது, இந்தச் சேதனப் பசளை விவகாரம்.

அசேதனப் பசளையின் பயன்பாடு, முற்றிலுமாக நிறுத்தப்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும், முன்னாயத்தம் முக்கியமானதாகும். அசேதனப் பசளையின் இறக்குமதியைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து, சேதனப் பசளையை உற்பத்தி செய்வதை, ஒவ்வொரு வீடுகளில் இருந்தும் ஆரம்பித்திருக்க வேண்டும்.

ஒவ்வொரு வீடுகளிலும் சேதனப் பசளை தயாரிக்கப்படுமாயின், வீட்டுத்தோட்டம், பூங்கன்றுகள் வளர்ப்பதற்காக, அசேதனப் பசளையின் பின்னே செல்லமாட்டார்கள். அப்போது ஓரளவுக்கு கேள்வி குறையும்.

பெரும் விவசாய நிலங்களைப் பயன்படுத்தி, விவசாயத்தில் ஈடுபடுவோரிடத்தில், சேதனப் பசளையைப் பழக்கப்படுத்தி, வழக்கமாக்கி இருக்கவேண்டும்.

பண்படுத்தப்பட்ட மண்ணிலிருந்து, அதிரடியான மாற்றங்கள், அதிக விளைச்சலை எதிர்பார்க்கமுடியாது. ஆகையால், அந்த நிலத்தின் ஒருபகுதியில் சேதனப் பசளையை பயன்படுத்தி, விவசாயத்தை ஆரம்பிக்குமாறு அறிவுறுத்தி இருக்கலாம். அதன்பின்னர், கொஞ்சம், கொஞ்சமாக முழுமையான மாற்றத்துக்குச் சென்றிருக்கலாம்.

அவ்வாறு பயணித்திருந்தால், அசேதனப் பசளை பயன்பாட்டில் இருந்து, சேதனப் பசளை பயன்பாட்டுக்கு, விவசாயிகள் மாறுவர். அப்போது பொருளாதார ரீதியில் பாதிக்கப்படமாட்டார்கள், பெருந்தொகையான மரக்கறிப் பயிர்களை, பிடுங்கி எறிய வேண்டி ஏற்பட்டிருக்காது.

ஒருபக்கம் கையைக் கடித்தாலும், மறுபக்கத்தில் வருமானத்தை இன்றேல் மூலதனத்தையேனும் காப்பாற்றியிருக்கலாம். யாழ்ப்பாணம் மாநகர சபை, உள்ளிட்ட இன்னும் சில சபைகளின் மீள்சுழற்சி மையங்களில் உருவாக்கப்படும் சேதனப் பசளைக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

காலவோட்டத்துக்கு ஏற்ப மாற்றங்களை மேற்கொள்ளவேண்டும். அதற்கான முன்னாயத்தப்படுத்தலே முக்கியமாகும். அந்தப் படிகளில் காலடியெடுத்து வைத்திருந்தால், திட்டமும் வெற்றியளித்திருக்கும்; விவசாயிகளும் வீதிகளுக்கு இறங்கியிருக்கமாட்டார்கள்.




## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

நாங்கள், நிகழ்காலத்தில் காணும் காட்சிகள், எதிர்காலத்தில் மாறிவிடலாம். மனிதர்களின் குணங்களும் ஒரே நிலையில் இருப்பதில்லை. இவர்களின் எண்ணங்கள், மாற்றங்களை ஏற்பதும் புதுமை இல்லை.

உங்களுடன் இளவயதில் உற்ற நண்பனாக இருந்தவன், உயர்நிலைக்கு வந்தபின்னர், உங்களைக் கண்டும் காணாமல் போவதுண்டு. இதற்காக வருத்தப்படக்கூடாது. எல்லா நண்பர்களும் இப்படியான குணம் கொண்டவர்கள் அல்ல! நிலையான நல்ல மனம் கொண்டவன், எவரையும் ஏற்றுக்கொள்பவன் ஆகின்றான்.

ஒரே குடும்பத்தில், பிரிவுகள் வருவதில்லையா? தாய், தந்தையை வெறுத்து ஒதுக்கி, தங்கள் வழியில் போகிறார்கள். இவர்களை உலகம் நிந்திக்கும்.

சின்ன வயதில் பாசத்தைக் கொட்டிய பிள்ளைகள், முதுமை நிலையைப் பெற்றோர் அடைந்ததும், அவர்களைப் பராமரிக்காமல் இருக்கிறார்கள்; சுயநலத்தின் வடிவம் இவர்கள்.

ஒழுக்கம், மனச்சாட்சி, நேர்மை, நீதி, பணிவு, பக்தி போன்றவை இன்னமும் உயிர்வாழ்கின்றன. ஒவ்வொரு தனிமனிதனும் தன்னைப் பரிசோதித்துக் கொள்வானாக.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## ஐ.எம்.எவ் கடன்:

# மூன்றாமுலகக் கடன் பற்றிய கதைகள்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை, இன்னும் கடனை வாங்குவதன் மூலம் தீர்த்து விடலாம் என்று பலரும் நம்புகிறார்கள்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி, இரண்டு விடயங்களை அடிப்படையாகக் கொண்டது. முதலாவது, பொருளாதாரக் கொள்கை; இரண்டாவது, அதன்வழியமைந்த பொருளாதாரக் கட்டமைப்பு.

இவை இரண்டிலும், அடிப்படையான மாற்றங்களைச் செய்யாத வரை, இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வில்லை. கடன் வாங்குவது, தற்காலிகமான ஆறுதலைத் தரும். ஆனால், வாங்கிய கடனையும் அதற்கான வட்டியையும் சேர்த்தே மீளச்செலுத்த வேண்டும் என்பதே யதார்த்தம்.

இன்று தனிமனிதர்கள் வாழ்வில், நிதிநிறுவனங்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை ஆழமாக யோசித்தால், செயற்பாட்டில் சர்வதேச நிதி நிறுவனங்கள் கொஞ்சமும் சளைத்தவையல்ல என்பது புலனாகும். ஐ.எம்.எவ், ஒரு கந்துவட்டிக்காரனுக்கு எவ்வகையிலும் சளைத்ததல்ல.

இன்று உலகெங்கும், மூன்றாமுலக நாடுகள் கடனில் அகப்பட்டுள்ளன. இயற்கை வளங்களும் மனித வளமும் கொண்ட இந்நாடுகள், ஏன் கடனாளியாகின என்ற கேள்வி, பெரும்பாலும் கேட்கப்படுவதில்லை.

மாறாக, கடன் என்பது சமூக அசைவியக்கத்தின் ஒரு பகுதியாக மாற்றப்பட்டுள்ளது. கடன் வாங்குவதை ஊக்குவிப்பதே, இன்றைய பொருளாதார முறையின் முக்கியமான அம்சமாக உள்ளது. இது கடன் வாங்காத ஒருவரை விட, கடன் வாங்கித் தட்டுத்தடுமாறி மீளச்செலுத்துகின்ற ஒருவரை, நம்பிக்கையானவராகப் பார்க்கிறது.

ஒருவரைத் தொடர்ச்சியாகக் கடனுக்குள் வைத்திருப்பதை, நிதிநிறுவனங்களும் அரசும் உறுதி செய்கின்றன. இதனால் கடனுக்கான வட்டி என்பது, மிகப்பெரிய இலாபமாகிறது. எனவே, இந்த விஷச் சூழலில் மக்களைச் சிக்கவைப்பதில், இந்தப் பொருளாதார முறை வெற்றிகண்டுள்ளது. இதன் நீட்சியே, சர்வதேச நிதி நிறுவனங்கள் ஆகும்.

கடந்தாண்டு தொடக்கத்தில், கொரோனா தொற்றுக்கு முன்வரை, மூன்றாமுலக நாடுகளின் வெளியகக் கடனின் மொத்தத்தொகை அண்ணளவாக 11 ரில்லியன் அமெரிக்க டொலராகும். பெருந்தொற்றும் விலைவாசி ஏற்றமும் காலநிலை மாற்றமும், இந்தத் தொகையைக் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் பலமடங்கு அதிகரித்துள்ளன. ஆனால், இதற்கு முன்னர், இவ்வளவு கடனுக்கு இந்நாடுகள் எவ்வாறு ஆளாகின என்ற கதையைப் பார்க்க வேண்டியுள்ளது.

நாடுகளின் வளர்ச்சி மாதிரிகளும் அவை மேற்கொண்ட பொருளாதாரச் சமூகத் தேர்வுகளுமே, மூன்றாமுலக நாடுகளின் கடன்களுக்கான பிரதான காரணமாகும். மூன்றாமுலக நாடொன்றின் தேசிய கடன், எவ்வாறு மிகப்பெரிய சிக்கலாக உருவெடுத்து, அந்நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு செல்கிறது என்பது புதிர்போல் தோன்றினாலும், அதுதான் கடந்த பல தசாப்தங்களாக மூன்றாமுலக நாடுகளின் கதையாக உள்ளது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய காலத்தில் தோற்றம்பெற்ற தாராளவாதமும் உலகமயமாக்கலும், அரசின் வகிபாகத்தைக் குறைப்பதை நோக்காகக் கொண்டிருந்தன. சோசலிச அரசுகளில் ஆழமாக ஊன்றியிருந்த 'சமூக நல அரசுகள்' என்ற கருத்தாக்கத்துக்கு மாறாக, திறந்த சந்தையையும் அரசுகளின் கட்டுப்பாடற்ற நிலையையும் முன்னிறுத்தின. இதன் ஒரு பகுதியாக, 'வளர்ச்சி' என்பது பரிந்துரைக்கப்பட்டது. அதேபோல, உலகமயமாக்கல் நுகர்வைப் பிரதானமாக்கியது.

கொலனியாதிக்கத்துக்குப் பிந்தைய அரசுகள், இக்கொள்கைகளை நடைமுறைப்படுத்தத் தொடங்கின. இதன் விளைவால், 'வளர்ச்சி' பற்றிய தவறான புரிதலுக்கு ஆளாகின. வளர்ச்சி என்பது எதற்கானது, யாருக்கானது ஆகிய கேள்விகள் கேட்கப்படவேயில்லை.

காலப்போக்கில் இது, 'நவீனமயமாதல்' என்ற புதிய பெயரைச் சூடிக் கொண்டது. மூன்றாமுலக நாடுகள், இந்தக் கவர்ச்சிகரமான சொல்லாடலில் வீழ்ந்தன. தங்கள் பொருளாதாரத்தின் அடிப்படைகளை, மாற்றிக் கொள்ளத் துணிந்தன. விவசாயத்தை மையமாகக் கொண்ட நாடுகள், தொழில்மயமாகின; தொழில்மயமான நாடுகள், சேவைமயமாகின.

இவ்வாறு, தங்களின் பொருளாதார பலங்களில் இருந்து விடுபட்டு, புதியவகை பொருளாதார அடிப்படைகளை நோக்கி அவை நகர்ந்தன. இதனால், அவர்களின் பொருளாதார பலம் கேள்விக்குள்ளானது. எனவே, 'நவீனமயமாகுவதற்காக' சர்வதேச நிதி நிறுவனங்களின் கடன் பொறிக்குள் அகப்பட்டுக் கொண்டன.

இதன் தொடர்ச்சியாக, வட்டியுடன் கடனை மீளச் செலுத்துவது என்ற நிதி நிறுவனத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள், இந்த நாடுகள் ஆட்பட்டன. அரச நிறுவனங்களை 'மீள்கட்டமைப்பு' செய்வதும் 'சீர்திருத்தங்களை' மேற்கொள்வதும் இதன் பகுதியாகின. இவற்றின் மோசமான பலன்களை அனுபவிப்பது, இந்நாடுகளில் உள்ள ஏழை மக்களாவர்.

வளர்ச்சிக்காக வாங்கப்படும் கடனில் பெரும்பகுதி, ஆட்சியாளர்களின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளை நிரப்பும். எனவே, திட்டமிட்ட திட்டத்துக்குரிய பணம் அரசிடம் இருப்பதில்லை. பின்னர், அக்கடனைத் திருப்பிச் செலுத்த புதிய கடனை நாடுகள் வாங்கும்; அவையும் ஆட்சியாளர்களின் தனிப்பட்ட கஜனாக்களை நிரப்பும். அதன் பின்னர் வாங்கிய கடனுக்கான வட்டியைச் செலுத்துவதற்கு, புதிய கடன்கள் வாங்கப்படும். இது ஒரு முடிவற்ற தொடராக விரியும். 1980களில் பிலிப்பைன்ஸ், நிக்கரகுவா, ஆர்ஜென்டீனா போன்ற ஏராளமான நாடுகளின் கதை இதுதான்.

1970களின் இறுதிப்பகுதியில், சிலியில் செப்புச் சுரங்கங்களின் வருமானம் உப்பிப்பெருத்த பொருளாதாரமாக உருமாறியது. சிலியின் நாணயத்தின் (பெசோ) பெறுமதி, திட்டமிட்டு வலுவானதாகக் காட்டப்பட்டது. அமெரிக்க டொலருக்கு எதிரான பெசோவின் பெறுமதி உயர்வாக, இதனால் இறக்குமதி செய்வது மலிவானது போன்றதொரு தோற்றம் உருவாகியது.

இதனால் சிலியின் மத்தியதர வர்க்கம், அளவற்ற நுகர்வில் இறங்கியது. பொருளாதாரம் சில ஆண்டுகளில் இறக்குமதியில் நம்பியிருக்குமாறு மாறியது. இதனால், உள்ளூர் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டனர். மெதுமெதுவாக, இறக்குமதிக்குக் கடன் வாங்கும் நிலைக்கு, சிலி தள்ளப்பட்டது.

உள்ளூர் உற்பத்தியாளர்கள் தொழிலற்றவர்களாகினர். ஏற்றுமதி அதிகரிக்காத நிலையில், இறக்குமதி பலமடங்கு அதிகரித்தது. இதனால் தொடர்ந்தும் கடன்வாங்க வேண்டிய நிலைக்கு சிலி ஆளாகியது. அப்போது, சர்வதேச நாணய நிதியம் உதவிக்கு வந்தது.

இதன் இன்னொரு வடிவம், நிக்கரகுவாவில் அரங்கேறியது. 1970களில் ஆட்சியில் இருந்த 'சமோசா' குடும்பத்தினர் சுருட்டிய பணம் அளவில்லாதது. 1972ஆம் ஆண்டு, நிக்கரகுவாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்துக்குக் கொடுக்கப்பட்ட அனைத்து உதவித்தொகைகளையும் இக்குடும்பம் சுருட்டிக்கொண்டது.

1979ஆம் ஆண்டு, 'சண்டனிஸ்டா' புரட்சியாளர்கள், இவர்களைத் துரத்தும்வரை இக்குடும்பம் ஆட்சியில் இருந்தது. இவர்கள் துரத்தப்படும் போது, அரசாங்கக் கையிருப்பு 300 மில்லியன் அமெரிக்க டொலர் மட்டுமே! ஆனால், மொத்தக் கடன் 4,000 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

1980களில் பிலிப்பைன்சில், மார்க்கோசின் ஊழல்களும் சுரண்டல்களும் உலகறிந்த விடயங்கள். 1986இல் பிலிப்பைன்சின் மொத்தக் கடன் 26,000 மில்லியன் டொலர். இதில் 15 சதவீதமானவை, மார்க்கோசின் மனைவி இமெல்டாவின் ஆடம்பரச் செலவுக்கானவை.

இன்னொருபுறம், பிலிப்பைன்ஸ் அணுசக்தித் திட்டமொன்றைத் தொடங்கியது. இதற்காக வாங்கப்பட்ட கடனுக்கு கொடுக்கப்பட்ட ஒருநாள் வட்டி 3,50,000 அமெரிக்க டொலர் ஆகும். இவ்வட்டி 1989ஆம் ஆண்டு 5,00,000 ஆக உயர்ந்தது. வாங்கிய கடன் மார்க்கோசினால் சுருட்டப்பட்டது.

இதேபோலவே, இன்னும் பல மூன்றாமுலக நாடுகளில் வாங்கப்படும் கடன், ஆட்சியாளர்களால் சுருட்டப்படுகிறது. 1979 முதல் 1983 வரையான நான்கு ஆண்டு காலத்தில் மெக்சிக்கோவிலிருந்து வெளியேறிய மொத்தப் பணம் 9,000 பில்லியன் அமெரிக்க டொலராகும். ஆனால், மெக்சிக்கோ கடனில் தத்தளித்தது. கடனை அடைக்க மேலும் கடன் வாங்கிய வண்ணம் இருந்தது.

ஆர்ஜென்டீனாவில் இராணுவ சர்வாதிகார ஆட்சி நடைபெற்ற வேளை, பெரும்பாலான கடன் இராணுவச் செலவீனங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டது. பெருவின் கதையும் இதுதான். எனவே, மூன்றாமுலக நாடுகள் எவ்வாறு கடனாளியாகின்றன என்பதற்கான ஒரு குறுக்குவெட்டுச் சித்திரமே, மேற்சொன்ன உதாரணங்கள் ஆகும்.

இதன் பின்னணியில், கடன் வழங்குனர்களாக உள்நுழையும் சர்வதேச நிதி நிறுவனங்கள் குறிப்பாக, சர்வதேச நாணய நிதியம் நிபந்தனைகளுடன் கடன்களை வழங்குகின்றது. அந்நிபந்தனைகளாக, அரச சேவைகளைத் தனியார்மயமாக்கல், சமூகநலன்களைக் குறைத்தல், தனியார்துறைக்கு வரி குறைப்பு, வரிச்சலுகைகளை அறிமுகப்படுத்தல் போன்றவற்றை வேண்டுகிறது.

மூன்றாம் உலக நாடுகளின் அரசுகள், பெருவாரியான தருணங்களில் சமூகப் பாதுகாப்பினது காவலனும் அத்தியாவசிய சேவைகளை வழங்குவோனும் என்ற தனது வகிபாகத்தில் தவறி விட்டன. இதற்கு மூன்றாமுலகக் கடன் மிகவும் முக்கியமான காரணியாகும்.

மேற்சொன்ன கதைகள், பல வகைகளில் இலங்கையைப் பிரதிபலிக்கின்றன. இவ்வாறான கடன்கள் மூலம், ஏற்கெனவே மக்கள் அனுபவித்து வந்த சமூகப் பாதுகாப்புகளை, சர்வதேச நாணய நிதியத்தின் கடன்கள் மூலம், இலங்கையர்கள் இழந்து விட்டார்கள்.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் கையேந்திக் கடன்வாங்கிய ஒவ்வொரு தடவையும் அதற்குப் பாரிய விலையை இலங்கை கொடுத்துள்ளது. எம்மிடம் எஞ்சியிருப்பது, இலவசக் கல்வியும் இலவச மருத்துவமும் தான். அதையும் நாம் தனியாரிடம் கையளிக்கும் நாள் தூரத்தில் இல்லை. அதைச் சாத்தியமாக்கவே ஐ.எம்.எவ் கடனை இலங்கை பெறவேண்டும் என்று வற்புறுத்துவோர் நினைக்கிறார்கள். மறைமுகமாக, இலங்கையின் ஏழைக் குடிமகனை, சுடுகாட்டுக்குச் கூட்டிச் செல்லும் வழியையே காட்ட முனைகிறார்கள்.

## கடிதங்கள்

### வேளாண்மை செய்யப்பட்ட நிலங்களை கைவிட வேண்டிய நிலை

கிண்ணியா பிரதேச விவசாயிகள், வேளாண்மை செய்கைக்காக உரிய காலத்தில் உரவகைகள் கிடைக்காததால், பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கிண்ணியா, குறிஞ்சாகேணி ஆகிய இரு விவசாய விரிவாக்கல் திணைக்களங்கள் இருக்கின்றன. இதில், கிண்ணியா பிரிவில் 2,530 விவசாயிகளும் குறிஞ்சாகேணி பிரிவில் 2,100 விவசாயிகளும் இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பிரதேசங்களில் மானவாரி, பெரும்போகம், பெரும் நீர்ப்பாசனம் ஆகிய மூன்று வகையான விவசாய நிலங்கள் காணப்படுகின்றன. பெரும்போகம், மானவாரி ஆகிய நிலங்களில் விதைப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்து விட்டன. ஆனால், உரிய பயிருக்குத் தேவையான உரமும் களைநாசினியும் இன்றி, பயிர் செய்யப்பட்ட நிலங்களைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில், கிண்ணியா விவசாய விரிவாக்கல் திணைக்கள பிரிவுக்குட்பட்ட பகுதியில் 5,817 ஏக்கர் நிலங்களுக்கு விவசாயிகள் பசளைக்காக விண்ணப்பித்துள்ளதாகவும் குறிஞ்சாகேணி விவசாய விரிவாக்கல் திணைக்கள பிரிவுக்குட்பட்ட பகுதியில் 1,950 ஏக்கர் நிலங்களுக்கு விவசாயிகள் உரத்துக்காக விண்ணப்பித்து இருப்பதாகவும் விவசாய சங்கங்கள் தெரிவிக்கின்றன.

சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு வைக்கோல், மாட்டெரு, குளத்து வாழை, எருக்கம் இலை போன்ற மூலப் பொருட்கள் தேவை. இவற்றைப் பெறுவதே, தாங்கள் எதிர்நோக்கி இருக்கின்ற முக்கிய சவால்கள் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஒலுமுதீன் கியாஸ்



செலான் வங்கியின் ருவன்வெல்ல கிளை

# புதிய முகவரியில்

செலான் வங்கி தனது ருவன்வெல்ல கிளையை அதிகளவு இடவசதி கொண்ட, புதிய கட்டடத்துக்கு மாற்றியுள்ளது. இந்தக் கிளை இல. 52, கேகாலை வீதி, ருவன்வெல்ல எனும் முகவரியில் திறந்து வைக்கப்பட்டது.

ருவன்வெல்ல புதிய கிளை, அதிகளவு இடவசதிகளைக் கொண்டுள்ளதுடன், வாடிக்கையாளர்கள் இலகுவான முறையில் வளாகத்துக்குள் பிரவேசிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது. மேலும், ATM சேவை வசதிகளையும் கொண்டுள்ளது. நியம பணி நேரங்களில் இந்தக் கிளை திறந்திருக்கும். வாடிக்கையாளர்களுக்கு பிரத்தியேகமான சேவைகளை வழங்கக்கூடிய வகையில் இந்தக் கிளை அமைந்திருப்பதுடன், உயர் சௌகரிய மட்டங்களை உறுதி செய்வதாகவும் உள்ளது.

தற்போதைய தொற்றுப் பரவலுடனான சூழலில், நாளாந்த செயற்பாடுகளை நிர்வகிக்கும் போது, சுகாதாரத் தரப்பினரால் அறிவுறுத்தப்பட்டுள்ள சகல வழிகாட்டல்களையும் செலான் வங்கி பின்பற்றுவதுடன், சகல வாடிக்கையாளர்களையும் சம்பந்தப்பட்ட வழிகாட்டல்களை பின்பற்றி, பாதுகாப்பாக இருப்பதற்கு ஊக்குவிக்கின்றது. தமது நாளாந்த கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு, வங்கியின் டிஜிட்டல் கட்டமைப்புகளை பயன்படுத்துமாறு அனைத்து வாடிக்கையாளர்களையும் கோரியுள்ளது.



2021 உலகக் கிண்ண போட்டிகளில்

# பிரகாசித்த சக்கரக் கதிரை டெனிஸ் அணிக்கு கௌரவிப்பு

இத்தாலியில் நடைபெற்ற சக்கரக் கதிரை டெனிஸ் உலகக் கிண்ண போட்டிகளில், சிறந்த பெறுபேறுகளைப் பதிவு செய்த இலங்கையின் சக்கரக் கதிரை டெனிஸ் அணிக்கு இளைஞர் விவகார அமைச்சுடன் SLT-MOBITEL இணைந்து விசேட கௌரவிப்பு நிகழ்வொன்றை விளையாட்டு அமைச்சில் அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது.

அணியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சாதனையைக் கௌரவித்துக் கொண்டாடும் வகையில், SLT-MOBITEL இனால் ஒவ்வொரு வீரருக்கும் தலா ரூ. 1,000,000 பணத் தொகையும் பயிற்றுவிப்பாளருக்கு ரூ. 250,000 தொகையும் வழங்கப்பட்டிருந்தது.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை, ஒழுங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அபிவிருத்தி அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் நிறுவனசார் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, SLT குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன, விளையாட்டுத் துறை அமைச்சு மற்றும் SLT-MOBITEL இன் சிரேஷ்ட அதிகாரிகளுடன் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இலங்கை அணியில் சுரேஷ் தர்மசேன, லசந்த ரணவீர, டி.எம். காமினி ஆகியோர் அங்கம் வகித்ததுடன், ஆறாமிடத்தை இவர்கள் சுவீகரித்திருந்தனர். பிரேஸில், பெல்ஜியம், போலந்து ஆகிய நாட்டு அணிகளை எதிர்கொண்டு வெற்றியீட்டியிருந்தனர். இந்த அணியின் பயிற்றுவிப்பாளராக ஜகத் வெலிகல செயலாற்றியிருந்தார்.

இலங்கையில் சகல விளையாட்டுகளினதும் நீண்ட கால பங்காளராக SLT-MOBITEL திகழ்வதுடன், இளைஞர்களுக்கு தமது திறனை ஊக்குவித்து நம்பிக்கையை மேம்படுத்தி, அதனூடாக நாட்டுக்குப் பெருமை தேடித் தருவதில் ஆதரவளிக்கின்றது. அனுசரணைகள், நிகழ்வுகளின் ஏற்பாடு மற்றும் இதர திட்டங்களினூடாக விளையாட்டுகளுக்கு SLT-MOBITEL வலுச் சேர்க்கின்றது. தேசத்தின் திறன் படைத்த மெய்வல்லுநர்களுக்கு சர்வதேச மட்டத்தில் போட்டியிடத் தயார்ப்படுத்தும் வகையில் நிறுவனம் ஆதரவளிக்கின்றது.

# சம்பத் வங்கியின் புதிய சேவை அறிமுகம்

சம்பத் வங்கி இலங்கையில் முதன்முறையாகவும், குறிப்பாக பிராந்தியத்தில் முதல் முறையாகவும், தன்னியக்க டெலர் இயந்திரங்களில் (ஏடிஎம்) தொடுகையின்றி பணத்தை மீளப்பெறும் வசதியை அறிமுகப்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், சம்பத் வங்கி தலைமை அலுவலக வளாகத்தில் இந்தச் சேவையை அறிமுகப்படுத்தி வைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். சம்பத் வங்கியின் பணிப்பாளர் சபைத் தலைவரான ஹர்ஷ அமரசேகர, சம்பத் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரான நந்த பெர்னாண்டோ, சம்பத் வங்கியின் குழும தலைமை தொழில்நுட்ப அதிகாரியான அஜித் சல்காது, சம்பத் வங்கியின் சர்வதேச வாணிபம் மற்றும் கடன் கட்டுப்பாட்டுப் பிரிவின் சிரேஷ்ட



பிரதிப் பொது முகாமையாளரான அயோத்ய இதவெல ஆகியோர் முன்னிலையில் அவர் இயந்திரத்தை தொடாமல் பணத்தை மீளப்பெறும் முதலாவது பரிவர்த்தனையை மேற்கொண்டார்.

சம்பத் வங்கி வாடிக்கையாளர்கள் மற்றும் நாட்டின் ஏனைய அனைத்து வங்கிகளின் வாடிக்கையாளர்களும் சம்பத் WePay செயலியைப் பயன்படுத்தி ஏடிஎம் திரையில் காண்பிக்கப்படும் பொது விரைவுத் தகவல் குறியீட்டை (QR) ஸ்கேன் செய்வதன் மூலம் நாடு முழுவதும் உள்ள எந்த சம்பத் வங்கி ஏடிஎம் மூலமாகவும் தங்கள் கணக்குகள் மற்றும் அட்டைகளில் உள்ள நிதியை மீளப் பெற முடியும்.

ஏடிஎம்மின் மேற்பரப்பை உடல் ரீதியாகத் தொடும் தேவையை நீக்கி, இது அபாயத்தைக் குறைக்கவும் வாடிக்கையாளர் பாதுகாப்பை மேம்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தற்போதைய உலகளாவிய கொவிட்-19 தொற்றுநோய் நிலைமையின் போது ஏடிஎம்களில் இருந்து பணத்தை மீளப் பெறுவதற்கான சிறந்த வழியாகும்.

இது சம்பத் வங்கியால் இலங்கை சந்தையில் அறிமுகம் செய்யப்பட்ட மற்றொரு முன்னோடியான டிஜிட்டல் தீர்வு. 1988 ஆம் ஆண்டில் நாட்டின் முதல் பன்முகமைய ஏடிஎம் வலையமைப்பின் அறிமுகம் அடங்கலாக சம்பத் வங்கி அதன் தொடக்கத்திலிருந்தே பல புத்தாக்கங்களை சந்தையில் அறிமுகம் செய்து வந்துள்ளது.

உத்தரகண்ட்

# உத்தரகண்டில் தாண்டவம்

## கனமழை; மண்சரிவால் 54 பேர் பலி; 11 பேர் மாயம்


உத்தரகண்டில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட, வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவில் சிக்கி இதுவரை 54 பேர் உயிரிழந்துள்ளதுடன் 11 பேர் மாயமாகியுள்ளதாக உத்தரகண்ட் மாநில அரசாங்கம் அறிவித்துள்ளது.

உத்தரகண்ட் மாநிலத்தில் பரவலாக அதிகப்படியான கனமழை பெய்து வருகிறது. இதனால் பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு, மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

சாமோலி உள்ளிட்ட மாவட்டங்களில் கடந்த 17ஆம் திகதி முதல் தொடர் கனமழை பெய்து வருவதால் பத்ரிநாத் தேசிய நெடுஞ்சாலையில் 7 இடங்களில் மண்சரிவு ஏற்பட்டது.



இதேவேளை, கனமழையால் வீடுகளை இழந்தவர்களுக்கு அரசாங்கம் சார்பில் ரூ.1,09,000 மற்றும் பலியானவர்களின் குடும்பத்துக்கு நான்கு இலட்சம் ரூபாய் வீதம் வழங்கப்படும் என, உத்தரகண்ட் மாநில அரசாங்கம் அறிவித்திருந்தது. இந்நிலையில் நேற்று (21), கனமழையின் தீவிரத்தை அறிய, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, உத்தரகண்ட் சென்று பார்வையிட்டுள்ளார்.



மும்பை

ஆர்யன் கானின் பிணை மனு தள்ளுபடி

# 26இல் மேல்முறையீட்டு விசாரணை

பொலிவூட் நடிகர் ஷாருக் கான் தாக்கல் செய்த பிணை மனு தள்ளுபடி செய்யப்பட்டதையடுத்து, இதனை எதிர்த்து மும்பை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. இந்த மனு எதிர்வரும் 26ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது. இதேநேரம்,பிணை கிடைக்காததால், மும்பையில் ஆர்தர் சிறைச்சாலையில் ஆர்யன் கான் உள்ளார்.

மஹாராஷ்டிர மாநிலம் மும்பையில் இருந்து கோவாவுக்கு பொலிவூட் நடிகர் ஷாருக் கானின் மகன் ஆர்யன் கான் மற்றும் அவரது நண்பர்கள் கப்பலில் சென்றனர். அப்போது, தேசிய போதைப் பொருள் தடுப்புப்படையினர், ஆர்யன் கான் உட்பட எட்டு பேரை கைது செய்தனர். அவர்களிடம் இருந்து போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்நிலையில், அவரை, தந்தை ஷாருக்கான் நேற்று (21) சிறையில் சந்தித்து பேசினார். ஆர்யன்கான் கைதான பிறகு, தந்தை மகன் இடையே நிகழும் முதலாவது சந்திப்பு இதுவாகும். கைதிகளை சந்திக்க மஹாராஷ்டிரா அரசாங்கம் அனுமதி வழங்கியதை தொடர்ந்து நடந்த இந்த சந்திப்பு சுமார் 20 நிமிடங்கள் நீடித்தது.

முன்னதாக, வெள்ளிக்கிழமையன்று, தனது தந்தை மற்றும் தாயாருடன் ஆர்யன்கான், வீடியோ கால் மூலம் பேசியிருந்தார்.

தமிழகம்

# முதலமைச்சர் வெளியுறவு அமைச்சருக்குக் கடிதம்

மீனவர்கள் பிரச்சினைக்கு, நிரந்தரத் தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்குமாறு, வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கருக்கு, தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் கடிதமொன்றை நேற்று (21) அனுப்பியுள்ளார்.

அனுப்பப்பட்ட அக்கடிதத்தில், மீனவர்களுக்கு மறுவாழ்வு அளித்திடவும், காணாமல் போன மீனவரை கண்டுபிடிக்க உரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்குமாறும் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரைக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

இலங்கை கடற்படையினர், தமிழ்நாட்டு மீனவக் கப்பலை விரட்டிப் பிடிக்க முயற்சித்த போது, மூழ்கிப்போன கப்பலில் காணாமல் போன மீனவரைக் கண்டுபிடிக்க உடனடி நடவடிக்கை எடுக்கக் கோரி, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதில், கடந்த 18.10.2021 அன்று மீன்பிடிக்கச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களின் மீன்பிடிக் கப்பலை, இலங்கை கடற்படையினர் துரத்தியபோது மூழ்கியது. அதிலிருந்து மூன்று மீனவர்களில் இரண்டு மீனவர்கள் காப்பாற்றப்பட்ட நிலையில், மீதமுள்ள



“ தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்களின் மீன்பிடிக் கப்பலை, இலங்கை கடற்படையினர் மூழ்கடிக்கும் துயர சம்பவங்கள் நீண்டகாலமாக தொடர்ந்து நிகழ்ந்து வருவதால் இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்குமாறும் வெளியுறவுத் துறை அமைச்சரிடம் கோரிக்கை

ஒரு மீனவரை தேடும் பணி 18.10.2021 முதல் நடைபெற்று வருகிறது எனக் குறிப்பிட்டுள்ளார். மீட்கப்பட்ட இரண்டு மீனவர்களுக்கு மறுவாழ்வு அளித்திடவும், காணாமல் போன மீனவரை கண்டுபிடித்து உரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், தனது கடிதத்தில் இதுபோன்ற துயர சம்பவங்கள் நீண்டகாலமாக தொடர்ந்து நிகழ்ந்து வருவதால் இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்குமாறும் வெளியுறவுத் துறை அமைச்சரை கடிதத்தின் மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்.

பெங்களூர்

# முஸ்லிம் திருமணம் ஓர் ஒப்பந்தம்

## நீதிமன்றம் கருத்து

ஜீவனாம்சம் கேட்டு தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்பளித்த கர்நாடக உயர் நீதிமன்றம், 'முஸ்லிம் திருமணம் என்பது ஓர் ஒப்பந்தம். விவாகரத்து செய்தாலும் சில உரிமைகள், கடமைகள் நிச்சயம் உள்ளன' எனக் குறிப்பிட்டுள்ளது.

பெங்களூரைச் சேர்ந்த இசாகர் ரெஹ்மான், 52, 1991ஆம் ஆண்டு, மனைவி சாயிரா பானுவை, 'முத்தலாக்' கூறி விவாகரத்து செய்தார். பின்னர், வேறொரு திருமணம் செய்து, குழந்தைகள் பிறந்துள்ளன. சாய்ரா பானு ஜீவனாம்சம் கேட்டு 2002 ஆம் ஆண்டு வழக்கு தொடர்ந்தார்.

அதை விசாரித்த, பெங்களூர் குடும்ப நல நீதிமன்றம், மாதம், 3,000 ரூபாய் ஜீவனாம்சம் வழங்கும்படி உத்தரவிட்டது. இதை எதிர்த்து ரஹ்மான் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கை தள்ளுபடி செய்ததுடன், அவருக்கு, 25 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



திருவள்ளூர்

# கால்நடை கழிவிலிருந்து மின்சாரம்

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி அருகேயுள்ள வரதராஜபுரம் ஊராட்சியில், கால்நடை கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்பட்டு தெரு விளக்குகள் ஒளிர வைக்கப்படுகின்றன.

ஊராட்சி நிர்வாகம், மாட்டுச் சாணத்திலிருந்து 'பயோ கேஸ்' தயாரிக்கும் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது.

இது குறித்து, வரதராஜபுரம் ஊராட்சித் தலைவர் கலையரசு தெரிவித்ததாவது: "எங்கள் ஊராட்சியில் கால்நடை வளர்ப்போரால் சுகாதார சீர்கேடு நிலவி வந்தது. அதற்கு முற்றுப் புள்ளி வைப்பது குறித்து யோசித்தபோது, மாட்டுச் சாணத்திலிருந்து, பயோ கேஸ் தயாரிக்கும் திட்டம் குறித்து அறிந்தேன்.

ஆகவே,அத்திட்டத்தை செயற்படுத்த ஊராட்சியில் தீர்மானம் நிறைவேற்றினோம்.

தற்போது, நாள் ஒன்றுக்கு 200 யூனிட் வரை மின்சாரம் கிடைக்கிறது. இதன் மூலம் ஊராட்சியில் உள்ள 200 தெரு விளக்குகளில், 100 தெரு விளக்குகள் இரவு முழுவதும் ஒளிர்கின்றன. நாங்கள் தயாரித்த மின்சாரம் மூலம் தெரு விளக்குகள் எரிகின்றன. படிப்படியாக 'பயோ காஸ்' உற்பத்தி அதிகரிக்கப்பட்டு, அதன்மூலம் கிடைக்கும் மின்சாரம் மூலம் ஊராட்சியின் அனைத்து தெரு விளக்குகளும் ஒளிர நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்:

# சுப்பர் - 12 இல் இலங்கை



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரின் சுப்பர்-12 சுற்றுக்கு இலங்கை தகுதி பெற்றுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் அபு தாபியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அயர்லாந்துடனான குழு ஏ போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே சுப்பர்-12 சுற்றுக்கு இலங்கை தகுதி பெற்றுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 171/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: வனிடு ஹஸரங்க 71 (47), பதும் நிஸங்க 61 (47), தசுன் ஷானக ஆ.இ 21 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜொஷ் லிட்டில் 4/23 (4), மார்க் அடைர் 2/35 (4), போல் ஸ்டேர்லிங் 1/4 (1), கிரேய்க் யங் 0/24 (4))

அயர்லாந்து: 101/10 (18.3 ஓவ. ) (பந்துவீச்சு: மஹேஷ் தீக்‌ஷன 3/17 (4), லஹிரு குமார 2/22 (4), சாமிக கருணாரத்ன 2/27 (3.3), வனிடு ஹஸரங்க 1/12 (4), துஷ்மந்த சமீர 1/16 (3))




போட்டியின் நாயகன்: வனிடு ஹஸரங்க

இதேவேளை, மற்றைய போட்டியில் நெதர்லாந்தை நமீபியா வென்றிருந்தது.

இந்நிலையில், ஷார்ஜாவில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் அயர்லாந்தும், நமீபியாவும் மோதவுள்ளதுடன், இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நெதர்லாந்தும், இலங்கையும் மோதவுள்ளன.

எல்.பி.எல்:

## ஜ:ப்னா கிங்ஸின் தலைமைத்துவங்கள் அறிவிப்பு



இவ்வாண்டு டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான லங்கா பிறீமியர் லீக்கில் பங்கேற்கும் ஜஃப்னா கிங்ஸ் அணியானது, முதலாவது அணியாக முக்கிய தலைமைத்துவ நிலைகளை அறிவித்துள்ளது.

அந்தவகையில், கிரிக்கெட் பணிப்பாளராக கணேஷன் வாகீசன், தலைமைப் பயிற்சியாளராக திலின கண்டம்பி, அணித்தலைவராக திஸர பெரேரா, சந்தைப்படுத்தல், தொடர்பாடல் மற்றும் ஊடகப் பணிப்பாளராக சாரங்க விஜேயரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பயிற்சிப் போட்டியில்

## அவுஸ்திரேலியாவை வென்ற இந்தியா



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடருக்கான பயிற்சிப் போட்டிகளில், சர்வதேச கிரிக்கெட் சபையின் அகடமியில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவுஸ்திரேலியாவுடனான போட்டியில் இந்தியா வென்றது.

ஸ்கோர் விவரம்:


நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா: 152/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஸ்டீவ் ஸ்மித் 57 (48), மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் ஆ.இ 41 (25), கிளென் மக்ஸ்வெல் 37 (28) ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவிச்சந்திரன் அஷ்வின் 2/8 (2), ராகுல் சஹர் 1/17 (3), புவ்னேஷ்வர் குமார் 1/27 (4), விராட் கோலி 0/12 (2))

இந்தியா: 153/2 (17.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: ரோஹித் ஷர்மா 60 (41), லோகேஷ் ராகுல் 39 (31), சூரியகுமார் யாதவ் ஆ.இ 38 (27) ஓட்டங்கள். பந்துவீச்சு: அஸ்தன் அகர் 1/14 (2), மிற்செல் ஸ்டார்க் 0/14 (2), மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 0/16 (2))

சம்பியன்ஸ் லீக்:


## அத்லாண்டாவை வென்றது யுனைட்டெட்



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற போட்டியில், 3-2 என்ற கோல் கணக்கில் இத்தாலிய சீரி ஏ கழகமான அத்லாண்டாவை யுனைட்டெட் வென்றுள்ளது.

யுனைட்டெட் சார்பாக, மார்க்கஸ் றஷ்ஃபோர்ட், ஹரி மக்குவாயா, கிறிஸ்டியானோ றொனால்டோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். அத்லாண்டா சார்பாக, மரியோ பஸ்காலிச், மெரி டெமிரல் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, பிரெஞ்சு லீக் 1 கழகமான லில்லியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், ஸ்பானிய லா லிகா கழகமான செவில்லாவுக்குமிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.



## பார்சிலோனா ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பாட்டி

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முன்களவீரரான அன்சு பாட்டி, ஒப்பந்த நீடிப்பு ஒன்றைக் கைச்சாத்திட்டுள்ளார்.

இந்த ஒப்பந்த நீடிப்பில், 18 வயதான பாட்டியை வேறு கழகங்கள் வாங்கும்போது ஒரு பில்லியன் யூரோக்களை செலுத்த வேண்டும் என்ற சரத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாட்டியின் புதிய ஒப்பந்தமானது 2027ஆம் ஆண்டு வரை செல்கிறது.

பிரேஸில்

# பிரேஸில் ஜனாதிபதி மீது வழக்குப் பதிவு



பிரேஸிலில் கொரோனாத் தொற்றுப் பரவலை மோசமாகக் கையாண்ட அந்நாட்டு ஜனாதிபதி ஜெய்ர் பொல்சொனாரோ மீது குற்ற வழக்குபதிவு செய்யும் பரிந்துரையை பாராளுமன்ற உறுப்பினர் குழு கொண்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவல் தீவிரமடைந்த போது ஜனாதிபதி பொல்சொனாரோ அறிவியல் ரீதியாக உரிய நடவடிக்கை எடுக்காமல், கொரோனா குறித்து தவறான தகவல்களை மக்களிடத்தில் பதிவு செய்து வந்தார்.

குறிப்பாக முகக் கவசம் அணியத் தேவையில்லை என்றும் கொரோனாத் தடுப்பூசி செலுத்துவது அவசியமற்றது எனவும் தெரிவித்து வந்தார். இதனால் அவர் மீது உலக அளவில் கண்டனம் எழுந்தது. இந்நிலையில் இவர் மீது அந்நாட்டு எதிர்க் கட்சி எம்பிக்கள் கொலை உட்பட 13 குற்ற வழக்குகளை பதிவு செய்து விசாரணையை நடத்த வேண்டும் என்ற பரிந்துரையைக் கொண்டு வந்துள்ளனர்.

இப் பரிந்துரை மீதான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் அடுத்த வாரம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா



## மனித உடலில் பன்றியின் சிறுநீரகம்

மனித உடலில் பன்றியின் சிறுநீரகமொன்று வெற்றிகரமாகப் பொருத்தப்பட்ட சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

விலங்குகளின் உடல் உறுப்புகளை மனிதனுக்குப் பொருத்த நெடுங்காலமாக சோதனைகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் நியூயோர்க் நகரில் உள்ள மருத்துவமனையொன்றில் சிறுநீரகம் பாதிக்கப்பட்டு மூளைச்சாவடைந்த ஒருவருக்கு மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றியிடம் இருந்து எடுக்கப்பட்ட சிறுநீரகம், உறவினர்கள் அனுமதியுடன் பொருத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்டது.

இதன்போது புதிதாகப் பொருத்தப்பட்ட பன்றியின் சிறுநீரகம் நன்றாகச் செயல்பட்டு சரியான அளவு சிறுநீரை வெளியேற்றியதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்காவில் 90,000 க்கும் மேற்பட்டோர் மாற்று சிறுநீரகத்துக்காக மூன்று முதல் ஐந்து வருடங்கள் வரை காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில் இச் சோதனை முயற்சி வெற்றி பெற்றதால் சிறுநீரக பற்றாக்குறையைப் போக்கிட முடியும் என மருத்துவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிரியா



## தாக்குதலில் மாணவர் மரணம்

சிரியாவில் இராணுவம் நடத்திய தாக்குதலில் நான்கு பாடசாலை மாணவர்கள் உட்பட 11 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் டமாஸ்கஸில் நேற்று முன்தினம்(20) இராணுவ வீரர்கள் சென்ற பஸ்ஸில் நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் 14 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக சிரிய இராணுவம் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள இட்லிப் மாகாணத்தின் அரிகா நகரில் குடியிருப்புப் பகுதியில் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

இத்தாக்குதலில் நான்கு பாடசாலை மாணவர்கள் உட்பட 11 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஈரான்

## முகத்தை மூட மறுத்த பெண்:

### நாய் பிடிக்கும் கருவி கொண்டு கைது செய்த பொலிஸார்




ஈரானில் முகத்தை மூட மறுத்த பெண்ணை நாய் பிடிக்கும் கருவியைக் கொண்டு பொலிஸார் கைது செய்துள்ளதாகக் கூறப்படும் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈரானில் பெண்கள் முகத்தை மூடும்படியான உடையினை அணிய வேண்டும் என்ற சட்டம் உள்ளது.

தனைக் கண்காணிக்க கலாசாரக் காவலர்கள் என்ற தனிப்பிரிவும் காணப்படுகின்றது. இப்பிரிவினர் இஸ்லாமியக் கலாசாரத்தை முறையாகப் பின்பற்றாதோரை கைது செய்வதோடு சிறைத் தண்டனை விதிக்கும் நடைமுறையும் காணப்படுகின்றது.

இந்நிலையில், பொதுவெளியில் முகத்தை மூடும்படியான உடையை அணியாத பெண் ஒருவரை வலுக்கட்டாயமாக இழுத்து நாயைப் பிடிக்கப் பயன்படுத்தப்படும் கருவியைக் கொண்டு பொலிஸார் கைது



செய்யும் வீடியோயொன்று இணையத்தில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் இக் குற்றச்சாட்டை மறுத்துள்ள அந்நாட்டுப் பொலிஸார் "விபசாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டிலேயே குறித்த பெண்ணைக் கைது செய்ய முயன்றதாகவும் அவர் ஆவேசமாக நடந்து கொண்டதாலேயே சில கடுமையான முறைகளைப் பயன்படுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்

காண்போரை அதிரச் செய்யும் இவ் வீடியோவுக்கு இணையத்தில் பலரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## பட்டத்தை உதறித்தள்ளிய மகாராணி



பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத் இவ் வருடத்திற்கான சிறந்த வயதான பெண் என்ற பட்டத்தினை ஏற்க மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய அரச குடும்பத்தில் அரசியாக நீண்ட காலமாக இரண்டாம் எலிசபெத் (வயது 95) வாழ்ந்து வருகிறார்.

இந்நிலையில் இவ் வருடத்திற்கான சிறந்த மூத்த பெண்மணி என்ற பட்டத்தினை மகாராணி எலிசபெத்துக்கு வழங்க பிரபல பிரித்தானிய பத்திரிகை ஒன்று முடிவு செய்ததாகவும், எனினும் மகாராணி "முதுமை என்பது எண்ணத்தைப் பொறுத்தது. நான் இப் பட்டத்திற்குத் தகுதியானவர் அல்ல. எனவே தகுதி வாய்ந்த வேறு ஒருவருக்கு இப் பட்டத்தை வழங்குங்கள்" எனக் கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

## சொந்தமாக செயலியொன்றைத் தொடங்கிய ட்ரம்ப்

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் "ட்ருத் ஷோஷல்" (Truth Social) என்ற பெயரில் செயலியொன்றைத் தொடங்கியுள்ளார்.

கடந்த வருடம் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோ பைடனுக்கு எதிராக ட்விட்டர், யூடியூப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களின் ஊடாக தனது எதிர்ப்பைத் தெரிவித்து வந்தார். சர்ச்சைக்குரிய வகையில் ட்ரம்ப் பேசுவதாகக் குறிப்பிட்டு ட்விட்டர், யூடியூப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் அவரது கணக்கு முடக்கப்பட்டது. இதனையடுத்து அவற்றிலிருந்து வெளியேறிய அவர் தனது கருத்துகளைத் தெரிவிப்பதற்காகக் குறித்த செயலியை உருவாக்கியுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 22 ஒக்டோபர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.